
தர்மசக்கரம்


















குரோதன ௵ ஆடி ௴ சக்கரம் 34 ஆரம் 7

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

திருநெல்வேலி ஜில்லா

பாபநாசத்தில் அந்தர்யோகம் - 22

2, 3 & 4—8—85

பொதியமலை அடிவாரத்தில் இருக்கும் பாபநாசம் க்ஷேத்திரத்தில் 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் தேதி வெள்ளி, 3 ஆம் தேதி சனி, 4 ஆம் தேதி ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள் தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும். அம்பாசமுத்திரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆறு மைல் தூரத்தில் பாபநாசம் க்ஷேத்திரம் இருக்கிறது.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் நபர் ஒன்றுக்கு ரு. 36-00 விதம், திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம், நால் ஜவுளி வியாபாரம், திரு. Sv. Rm. A. நடராஜ முதலியார் அவர்களுக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்து, அனுமதிக் கார்டு பெற்றுக்கொள்ளவேண்டும். கலந்து கொள்ளாத அன்பர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவு செய்யப்பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் எடுத்துக்கொள்ளப்படமாட்டார். பதிவு செய்துகொண்டவர்கள் அனைவரும் ஆகஸ்ட் மாதம் 1 ஆம் தேதி வியாழக்கிழமை மாலையே பாபநாசத்திற்கு வந்து சேரவேண்டும்.

உணவு வசதி வேண்டாதவர்கள் ரு. 36-00 கட்டவேண்டியதில்லை. அந்தர்யோகக் கட்டுத்திட்டத்துக்குட்பட்டு அந்தர்யோக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம்.

தாய்மார்களும் இதில் கலந்துகொள்ளலாம். பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டு வரவேண்டும்.

சென்னை, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், திருக்குற்றலம், தென்காசி சங்கரன் கோவில் முதலிய இடங்களிலிருந்து பாபநாசத்திற்குப் போக பஸ்கள் கிடைக்கும் அம்பாசமுத்திரத்திலிருந்து பாபநாசத்திற்கு அடிக்கடி பஸ்கள் கிடைக்கும்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	5-00	
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-25	6-00
நீராடல் முதலியன	6-00	7-30
காலை தியானம்	7-30	8-00
சிற்றுண்டி	8-00	9-00
காலை உபந்யாசம்	9-00	10-00
மௌனம், உழவாரப்பணி	10-00	11-00
பஜனை	11-00	11-45
கோவில் வழிபாடு	11-45	12-30

மாலை

	மணிமுதல்	மணிவரை
போஜனம், ஓய்வு	12-30	3-00
மாலை உபந்யாசம்	3-00	4-00
தனியாக வாசித்தல்	4-00	4-30
பானம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-15
நாமஜபம்	6-15	6-45
தியானம்	6-45	7-15
இரவு போஜனம்	7-15	8-30
ஸத் சம்பாஷணை	8-30	9-30

குறிப்பு :— மூன்றுவது நாள் ஞாயிறு மாலை 5 மணியுடன் அந்தர்யோகம் முடிவுபெறும்.

ஸதானந்த
காரியதரிசி

Sv. Rm. A. நடராஜ முதலியார், அம்பாசமுத்திரம். ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்.

பாபநாசம் அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34 | குரோதன ஸூ ஆடி மீ | ஆரம் 7

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி'யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

சேலத்தில் 21—7—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனைக் கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ காமராஜ் மாவட்டம்—விருதுநகரில் 21—7—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சமரச சன்மார்க்க சங்கம் (முனிசிபல் ஆபீஸுக்கு எதிரில்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 3-00 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

மதுரைமாவட்டம்—வடக்கம்பட்டியில் 21—7—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: காந்தி மஹாலில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—தூத்துக்குடியில் 21—7—85 ஞாயிறு

இடம்: சிவன் கோவில் தெருவிலுள்ள சச்சிதானந்த சபை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

சேலம் ஜில்லா—இராசிபுரத்தில் 28—7—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சிவானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—உமரிக்காட்டில் 28—7—85 ஞாயிறு

இடம்: அருள்மிகு அம்மன் திருக்கோயில்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீ வைகுண்டத்தில் 11—8—85 ஞாயிறு

இடம்: அருள்மிகு கண்ணபிரான் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

ஸ்ரீ காமராஜ் மாவட்டம்—சிவகாசியில் 17—8—85 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா ஆஸ்ரமம், (வெள்ளையாபுரம் ரோடு)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

ஸ்ரீ காமராஜ் மாவட்டம்—இராஜபாளையத்தில் 18—8—85 ஞாயிறு

இடம்: பழையபாளையம் பாரதி கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: மதிய உணவிற்கு ரூ. 2-00 நேரில் செலுத்திச் சீட்டுப்பெற்றுக் கொள்ளலாம்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34 | குரோதன ஸ்ரீ ஆடி மீ | ஆரம் 7

பிரார்த்தனை

त्र्यम्बकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् ।
उर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय माऽमृतात् ॥ — यजुर्वेदम्

த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்தனம் ।
உர்வாருகமிவ பந்தனான்ம்ருத்யோர்முக்ஷீய மாऽம்ருதாத் ॥ — யஜுர்வேதம்

முக்கண்ணனை வழிபடுவோம். அவன் நமக்கு நலன்களை நல்குவான். வெள்ளரிப்பழம் கொடியிலிருந்து பிரிவதுபோன்று மரணத்தினின்று விலகியிருக்க அவன் நமக்கு உதவுவான்; அழியாப்பெருநிலையை அவன் நமக்குத் தருவான்.

பாவியேன் இனிஎன் செய்கேன்
பரமனே! பணிந்துஉன் பாதம்
சேவியேன்; விழிநீர் மல்கச்
சிவசிவ என்று தேம்பி
ஆவியே, நிறைய வந்த
அமுதமே என்னேன்; அந்தோ
சாவிபோம் சமயத்து ஆழ்ந்து
ஜகத்திடைத் தவிக்கின்றேனே.

— தாயுமானவர்

அருள் விருந்து

தூய பக்தன் ஜீவ முக்தன் ஆகிறான்.

தன் துயரமே தன்னைத் தகனம் பண்ணுகிறது.

அகங்காரமற்றவனுக்கு எதிரிகள் யாருமில்லை.

உணர்ச்சியற்ற இயக்கம் ஒன்றுக்கும் உதவாது.

கடும் சொல் சொல்பவன் அசாந்தியை வளர்க்கிறான்.

சுயநலத்தை வளர்ப்பவனுக்குத் தெய்வீகம் விளங்காது.

தூய வாழ்வினின்று பிசகுகிறவன் விழலுக்கு நிகராகின்றான்.

காமத்துக்கு அடிமைப்படுபவன் வாழ்வில் எதற்கும் உதவான்.

அடிபணியத் தெரிந்துகொள்பவனே ஆளவல்லவன் ஆகிறான்.

சீலத்தின் வாயிலாகச் சாதாரண மனிதன் சான்றோன் ஆகிறான்.

பாரமார்த்திகப் பெருவாழ்வில் ஈடுபடுபவனுக்கு உலோகாயதம் ஏதுமில்லை.

ஒழுக்கத்தினின்று பிசகாதவனே மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதுகிறான்.

தூய உள்ளத்தில் கசிவுடன் எழும் பிரார்த்தனை யாண்டும் வலிவு வாய்ந்தது.

அடிமை வாழ்வு வாழ்பவனால் மேலான காரியம் எதையும் சாதிக்க முடியாது.

ஆத்மீகத் துறையில் முயற்சிக்கேற்றவாறு மனிதன் முன்னேற்றமடைகிறான்.

வையக வாழ்வு வெறும் கனவு என்றால் அக்கனவை மேலானதாக மாற்றிக்கொள்.

பிறப்பில் தன்னை மேலானாகக் கருதுபவன் சமுதாய சேவைக்கு உதவமாட்டான்.

இலட்சியம் எவ்வளவுக்கெவ்வளவு பெரியதோ அதற்கேற்றவாறு மனிதன் மேலோனாகிறான்.

தௌர்பாக்கியத்தை மகிழ்வோடு ஏற்றுக்கொள்பவனுக்கு அது சௌபாக்கியமாக மாறுகிறது.

நடையுடை பாவனைகளில் முற்றிலும் பிறரைப் பின்பற்றுபவன் சுதந்திர புருஷன் ஆகமாட்டான்.

நிறை வாழ்வு வாழ்பவனுக்குப் பிரம்மச்சரியம் என்னும் பண்புக்கு ஈடானது பிரபஞ்சத்தில் ஏதுமில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

சிறுமி ஒருத்தியாக அம்பிகை அவதரித்து வந்த வரலாறு கடந்துபோன இதழில் விளக்கப்பட்டது. அதையொட்டிய சம்பாஷணை மேலும் பரமஹம்சருக்கும், மகேந்திரருக்கும் இடையில் நிகழ்வதாயிற்று. அது வருமாறு:

பரமஹம்சதேவர்: "இதுபோன்ற தெய்வீக நிகழ்ச்சிகளை நரேந்திரன் முன்பு வெறும் கட்டுக்கதை என்று புறக்கணித்து வந்தான். ஆனால் நாள் ஏறஏறத் தெய்வத்தால் ஆகாதது ஒன்றுமில்லை என்னும் நம்பிக்கை அவனிடத்து உறுதியாக வடிவெடுத்து வருகிறது. ஆதலால் இந்த நிகழ்ச்சி சாத்தியம் என்னும் நம்பிக்கையில் அவன் உட்பட்டிருக்கிறான்.

"பூரணன் என்ற இளைஞன் விஷ்ணுவினுடைய அம்சமாகப் பிறந்திருக்கிறான் என்ற எண்ணம் என் உள்ளத்தில் உருவெடுத்தது. மானசீகமாக அன்னவனை நான் வணங்கினேன். அத்தகைய மானச பூஜையில் நான் அவனுக்கு வில்வபத்திரம் சமர்ப்பித்து வணங்கினேன். என்ன விந்தை! சிவனுருக்குரிய வில்வ பத்திரத்தை விஷ்ணுவின் அம்சமாக வடிவெடுத்து வந்திருந்த மூர்த்தி ஏற்றுக்கொள்ளவில்லை. பின்பு அந்த வழிபாட்டை ஒதுக்கி வைத்து விட்டுத்துளசி பத்திரமும், சந்தனமும் சேர்த்து வைத்து அவன் பாதத்தில் சமர்ப்பித்தேன். அந்த வழிபாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதினின்று பேருண்மை ஒன்று வெளியாகின்றது. சிவனுருக்குரியது வில்வ பத்திரம் என்பதும் மஹாவிஷ்ணுவுக்குரியது துளசிபத்திரம் என்பதும் பழங்காலத்திலிருந்து வந்துள்ள ஐதிகமாகிறது. அத்தகைய ஐதிகத்தைமுறைப்படி பின்பற்ற பக்தர்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். கடவுள் ஒருவர். அந்த ஒரு பொருள் தம்மைச் சிவனுகவும் விஷ்ணுவாகவும் ஏனைய வடிவங்களாகவும் விளக்கிக்கொண்டிருக்கிறது. ஆதலால் தென்படுகின்ற வடிவங்களனைத்தும் பரமனுடைய தோற்றங்களாம். இக்கோட்பாட்டில் நாம் பூரண நம்பிக்கை வைக்கவேண்டும். இதைப்பற்றி நீ என்ன கருதுகின்றாய்?"

மகேந்திரர்: "ஐயனே! தாங்கள் பகருவது முற்றிலும் மெய்."

பரமஹம்சதேவர்: "கமார்ஹட்டி என்னும் கிராமத்தில் பக்திமதி ஒருத்தி வசித்து வருகின்றாள். அவள் சர்வகாலமும் கோபால மந்திரத்தை ஜபித்து வந்தாள். அங்ஙனம் ஆண்டுகள் பல கடந்துபோயின. அதன் விளைவாக அவள் அடையப்பெற்றிருந்தது ஜப சித்தி என்னும் பெரிய நிலையாம். அவளுடைய மனது தனக்குத் தேவையாயிருந்த ஏனைய சிறிய செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற பொழுதும் அவளுடைய மனதில் பெரும்பகுதி ஜபம் பண்ணுவதிலேயே மூழ்கியிருக்கிறது. கங்கைக் கரையோரத்தில் தன்னந்தனியாக ஒரு குடிசையில் அவள் வாழ்ந்து வருகின்றாள். அவள் அடைந்துள்ள மனபரிபாகத்தின் விளைவாகத்தெய்வீகக் காட்சிகள் பலவற்றை அவள் காண்கின்றாள். கோபால மந்திரத்தில் அவள் சித்தியடைந்திருந்தாள். அதன் விளைவாகக் கோபாலனுடைய வடிவத்தை அவள் யாண்டும் தரிசித்து வந்தாள். கோபாலன் என்னும் குழந்தை அவளுக்கு அருகில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கும். தேவை ஏற்படும்பொழுது அக்குழந்தைக்கு அந்தப் பக்திமதி தானே தன் முலைப்பாலை ஊட்டுகிறாள். அந்த மாது தான் வசித்து வருகிற குடிசையிலே நடமாடும்பொழுது அக்குழந்தையும் அவள் கையைப் பிடித்துக்கொண்டு அவளோடு இங்குமங்கும் போகிறது. தன் வழிபடு தெய்வமாகிய அந்தப் பால கோபாலனுடன் அவள் உரையாடுகின்றாள். குழந்தையும் மழலைச் சொல்லில் அவளோடு பேசுகிறது. இவையாவும் வெறும் கற்பனையல்ல. நாம் ஒருவரோடு ஒருவர் உரையாடுவதைவிடப் பன்மடங்கு உறுதியான பாங்கிலே அம்மாவோடு ஒட்டி உறவாடி வருகிறது. இக்காட்சியை நானே பார்க்கிறேன். இந்நிகழ்ச்சிகள் யாவையும் நான் நரேந்திரனிடம் தெரிவித்தேன். அதைக்கேட்டு ஆனந்த பரவசம் அடைந்த அவன் . கண்களினின்று முத்து முத்தாக ஆனந்

தக் கண்ணீர் ததும்பி வந்தது. முன்பொரு காலத்தில் நான் இவைபோன்ற பல தெய் வீகக் காட்சிகளைக் காண்பது உண்டு. ஆனல் நாள் ஏற ஏற என் இயல்பு மாறியமைந்து வருகிறது. அக்காலத்தில் நான் படைத்தி ருந்தது பெண்பால் ஒருத்திக்குரிய தளதளத்த நெஞ்சமாகும். இடபொழுது என் இயல்பு வல்லியல்பாக மாறியமைந்து வருகிறது. இக் காலத்தில் நான் காணும் தெய்வீகக் காட்சி கள் மிகமிகச் சிலவேயாம்.

“இளைய நரேந்திரனிடம் ஆண்மை திகழு கிறது. ஆகையினல் அவன் தியானத்தில் அமருகின்றபொழுது அவனுடைய மனது அறவே உள் முகமாகச் செல்லுகிறது. உணர்ச்சி அறிகுறி ஏதும் அவனிடத்துப் புறத் தில் தென்படுகிறதில்லை. இதற்கு நேர்மாருக நித்திய கோபால் படைத்திருப்பது பெண்ணி யல்பு. ஆதலால் அவனிடத்து ஆத்மீக உணர்வு வடிவெடுக்கின்றபொழுது அவனுடைய உடல் வளைந்தும் விகாரப்பட்டும் தென்படுகிறது. உணர்ச்சியின் அறிகுறிகள் முழுதும் அவன் மேனியில் தென்படுகின்றன.”

இப்பொழுது மகேந்திரரிடம் கருத்து ஒன் றைப்பரமஹம்சதேவர் தெரிவித்தார். “விநேத் என்னும் இளைஞன் ஆத்மசாதனத்தில் ஈடுபடு கிறன். ஆயினும் மணம் புரிந்துகொண்டவனு யிருக்கிறன். ஆதலால் அவன் இடையிடையே தன் மனைவிக்கருகில் நித்திரை போவதன் நிர்ப்பந்தம் அவனுக்கு வருகிறது. ஆனல் ஆத்ம சாதகன் ஒருவன் எக்காரணத்தை முன் னிட்டும் தன்னுடைய மனைவியுடன் படுத்து உறங்கலாகாது. அப்படி உறங்குவதால் உண்டாகின்ற மன விகாரங்கள் பாராட்டுதற் குரியவைகள் ஆகமாட்டா.

“துவிஜனுடைய மன நிலையில் பெரிய மாறு தல்கள் வந்துகொண்டிருக்கின்றன. என் அரு கில்அமர்ந்துகொண்டு அவன்தியானம் பண்ணு கின்றபொழுது அவனுடைய உடல் லேசாக முன்னுக்கும் பின்னுக்கும் அசைகிறது. ஆயி னும் அவன் தனது மனது முழுதையும் என் சொருபத்தில் செலுத்துகிறன். அது சாமா னியமான நிலையன்று. சாதகன் ஒருவன் தியானத்தில் அமருகின்றபொழுது தன் மனது முழுதையும் திரட்டி எடுத்துப்பரிபாகம்அடைந் துள்ள பரமபுருஷன் சொருபத்தில் ஒன்றித் திருக்கும்படி செய்வானுகில் அது அடைதற் கரிய பெரிய நிலையாம். அந்நிலையை அடையப் பெற்றவன் தானே அதிவிரைவில் அனுபூதி மான் ஆவான்.

“இந்த மேனியினிடத்துப் பலருடைய மனது கவர்ந்து இழுக்கப்படுகிறது. அதற்குக்காரணம் யார் என்று தெரியுமா? நான் என்னும் அகங்கா ரம் சிறிதளவாவது இந்தச் சரீரத்தில் இல்லை. இதில் மிளிர்வது பரம்பொருள் ஒன்றேயாம். ஆத்ம சாதகன் ஒருவனுடைய ஜீவ வியக்தி கலைந்துபட்டுப்போதுமாகில் மேற்கொண்டு அந்த மேனியில் மிளிர்வது பரம்பொருளின் சொருபமேயாம். இம்மேனியின்கண் பரமன் தானே வீற்றிருக்கிறன். ஆகையால்தான் ஆத்மசாதகர்கள் இதனிடத்துக் கவர்ந்துஇழுக் கப்படுகின்றனர். பரத்தில் லயமாயிருக்கும் இந்த மேனியின் ஸ்பரிசம் சிறிதளவாவது ஆத்ம சாதகன் ஒருவனுக்கு உண்டாகுமாகில் அக்கணமே ஆத்ம போதம் அவனிடத்துத் தலையெடுக்கிறது. எரியும் விளக்கு ஒன்றில் ஆயத்தப்படுத்தியுள்ள மற்றொரு விளக்கு தொடர்பு கொள்ளுமாகில் அக்கணமே அதனி டத்தும்தீபம் ஏற்றிவைக்கப்படுகிறது எங்குப் பரம்பொருள் சாந்நித்தியம் ஓங்குகின்றதோ அங்குதான் இத்தகைய நிகழ்ச்சி நேரவல்லதா கிறது. கல்கத்தாவுக்குப் பக்கத்திலிருந்த பல் கேரியா என்னும் கிராமத்திலிருந்து தாரக்நாத் கோஸால் என்னும் இளைஞன் சிலநாள் தக்ஷிணேசுவரத்தில் வாழ்ந்திருந்தான். பிறகு ஏதோ ஒரு குடும்ப காரியத்தைக் கவனித்தல் பொருட்டு அவன் அங்கிருந்து தன் கிராமத் திற்குப் போய்வர வேண்டிய அவசியம் ஏற் பட்டது. இம்மேனியின் முன்னிலையில் அவன் வீழ்ந்து வணங்கினன். பிறகு தளதளத்த நெஞ்சம் படைத்தவனுக அவன் இங்கிருந்து புறம் காட்டாது பின் வாங்கினன். அப்படி அவன் புறப்பட்டுப் போகும்பொழுது அரிய தொரு காட்சியை நான் கண்டேன். இந்த மேனியினின்று ஒளிப்பிழம்பொன்று கிளம்பி அவனைப் பின்தொடர்ந்து போய்க்கொண்டிருந் தது. சில நாட்களுக்குப் பிறகு அவன் மீண்டும் தக்ஷிணேசுவரம் வந்து சேர்ந்தான். சமாதி யிலே மூழ்கியிருந்தபடி இந்த மேனியில் வீற்றி

ருக்கும் பொருள் அப்படித் திரும்பிவந்து தாரக நாத்கோஸாவின் நெஞ்சின்மீது தன் பாதத்தை நாட்டியது.

"இத்தகைய மனபரிபாகம் அடையப் பெற்றுள்ள இளைஞர்கள் பெறுதற்கரிய பேருக அமைந்துள்ளனர். இவர்களின் எண்ணிக்கை அதிகமாவது பெரிய வாய்ப்பாம்.''

மகேந்திரர்: ''இங்கு வரும் இளைஞர்களுள் மோஹிதன் என்பவன் நல்லியல்பு படைத்தவன். தங்கள் தரிசனத்தைப் பெறுவதற்காக அவன் ஏற்கனவே இரண்டொரு தடவை இங்கு வந்துள்ளான். கல்லூரிப்பட்டம் பெறுவதற்காகச் சில நூல்களை அவன் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறன். அவன் அருள்தாகம் மிகப் படைத்தவன்.''

பரமஹம்சதேவர்: ''நீ பகர்வது பொருத்தமானதே. ஆயினும் அது போதாது. அவனுடைய அங்க அடையாளங்களில் மேலான அறிகுறிகள் ஏதுமில்லை. அவனுடைய உடல் அமைப்பில் ஆத்ம சாதனத்துக்கேற்ற அறிகுறிகள் ஏதுமில்லை. முகவெட்டிலோ அவன் ஒரு சாந்த மூர்த்தியாகத் தென்படுகிறன் அல்லன். ஆனல் இங்குத் தொடர்ந்து வரும் இளைஞர்களுள் பண்பில் சிறந்தவர்கள் பலர் இருக்கின்றனர்.

"ஸ்தூல சரீரம் எடுக்கின்ற பொழுதே அதைத் தொடர்ந்து தொல்லைகள் பல ஜன்மாந்தர வாசனையாக வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு மேல் மானுட ஜன்மத்தில் இடைஞ்சல் ஒன்று உளது. அறிந்தோ அறியாமலோ சான்றோர் ஒருவரால் ஒருவன் சபிக்கப்படுவானகில் அந்தச் சாப நிவர்த்தியின் பொருட்டு அவன் மானுடனக ஏழுபிறப்புக்கள் எடுத்தாக வேண்டும். ஆதலால் மானுட ஜன்மம் எடுத்தால் மட்டும் போதாது. சான்றோர் அனுக்கிரஹத்தின் பொருட்டு ஒருவன் மிக எச்சரிக்கையாக வாழ்ந்திருக்க வேண்டும். அருள் தாகம் சிறிதளவாவது ஒருவனிடத்தில் அமைந்திருக்குமாகில் அதன் பொருட்டு அந்த ஜீவன் மானுடப் பிறப்பு எடுத்தாக வேண்டும்."

பக்தர் ஒருவர்: ''ஈஸ்வர அனுக்ரஹத்துடன் பிறப்பெடுக்கின்றவர்களுடைய ஆசைகள் எத்தகையவைகளாக இருக்கும்?''

பரமஹம்சதேவர்: (புன்னகை பூத்தவராகப் பகர்வாராயினர்): "என்னைப் பொறுத்தவரையில் உலக ஆசைகள் அனைத்தையும் நான் அறவே துறந்தவன் அல்லன். ஒரு தடவை சாது ஒருவர் தம் மேனியின் மீது சால்வை ஒன்று போர்த்திக்கொண்டிருந்தார். அதைப் பார்த்ததும் நானும் அவர் போன்று சால்வை ஒன்றைப் போர்த்திக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் வந்தது. அந்த ஆசை இன்னும் என் மனத்தினின்று அகலாதிருக்கிறது. இதை முன்னிட்டு நான் மற்றொரு பிறப்பெடுக்க வேண்டுமோ என்னவோ எனக்குத் தெரியாது."

பலராம்வசு: ''ஆசையினல் சால்வை ஒன்று போர்த்திக்கொள்வதன் பொருட்டு நீங்கள் இன்னெரு பிறவி எடுக்கப் போகின்றீர்களா?" என்று கேட்டார். இக்கூற்றுக்குச் செவி கொடுத்த அனைவரும் நகைத்தார்கள்.

பரமஹம்சதேவர் புன்னகை பூத்தவராகப் பகர்வாராயினர்: ''சாது ஒருவனுடைய உள்ளத்தில் போற்றுதற்குரிய மேலான ஆசை ஏதேனும் ஒன்று அந்திய காலத்தில் அவனிடத்துக் குடிகொண்டு இருக்கலாம். சாதுக்கள் சென்று தரிசிப்பதற்குச் சதுர்தாம் என்னும் நான்கு ஸ்தலங்கள் நாட்டின் நான்கு பக்கங்களிலும் இருக்கின்றன. அவையாவன: வடக்கே பத்ரிநாத், கிழக்கே பூரி ஜகந்நாத், மேற்கே துவாரகை, தெற்கே ராமேஸ்வரம். சாதுக்களில் சிலர் இந்த நான்கு ஸ்தலங்களுக்கும் யாத்திரை போவதில்லை. ஏதோ மூன்று ஸ்தலங்களுக்குப் போய்விட்டு நான்காவது ஸ்தலத்தைப் பாக்கி வைத்துக் கொள்கிறர்கள். அதற்குக் காரணம் அக்குறைநிலை அவர்களுடைய மனத்தில் எஞ்சியிருக்கும். இன்ன ஸ்தலத்திற்குப் போகவேண்டியது பாக்கியிருக்கிறது என்னும் எண்ணம் அவர்கள் உள்ளத்தில் உதித்துக் கொண்டிருக்கும். அது பாராட்டுதற்குரிய நல்ல ஆசை. நல்லாசையை உள்ளத்தில் வளர்த்துவருபவர்கள் அந்திய காலத்தில் நல்லெண்ணத்துடன் இருப்பார்கள். ஆசை அறுந்தபின்தான் பிறவியொழியும். ஆசையிருக்குமளவு பிறப்பு இருக்கும். நல்ல பிறப்பு அமைவதற்கு நல்ல எண்ணம் வேண்டும். நல்ல எண்ணத்துடன் உடலை உகுக்கின்றவர்கள் அதற்கேற்ற பொருத்தமான பிறப்பை அடுத்த பிறவியில் எடுக்கிறர்கள்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

**14-10. எட்டத்தொலையாத எந்தைபிரான் சந்நிதியில்
பட்டப் பகல்விளக்காய்ப் பண்புறுவது
[எந்நாளோ.**

எட்டத் தொலையாத—ஆராய்ச்சி பண்ணிப் பார்க்க பார்க்க முடிவு காண முடியாதபடி அகண்டாகாரத்தில் விரிந்து ஓடவல்லது இறைவனுடைய சந்நிதானம்.

சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். அகண்ட சச்சிதானந்தக் கடலில் ஆலங்கட்டி ஒன்று விழுகிறது என்று வைத்துக்கொள்வோம். அது கரைந்துபட்டுப்போகாது தன் வடிவை வைத்திருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இந்நிலையிலுள்ள ஆலங்கட்டி கடலினுள் எப்பக்கம் எவ்வளவு ஆழ்ந்து சென்றாலும் அது கடலின் முடிவைக் காண முடியாது. அதே விதத்தில் பரமாத்மனிடம் ஒன்றுபட்டுள்ள ஜீவாத்மன் தெய்வாதீனமாகத் தன் வடிவை இழந்து விடாது காத்துப் பிடித்து வைத்திருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அந்த ஜீவாத்மன் அகண்ட சச்சிதானந்தமாயுள்ள கடலினுள் எப்பக்கம் எவ்வளவு காலம் வேண்டுமென்றாலும் ஆழ்ந்துவேகமாகப் போய்க்கொண்டிருக்கலாம். ஆயினும் அந்தச் சச்சிதானந்தப்பொருளில் எங்குமே அவன் எல்லை காணமாட்டான். அங்ஙனம் அகண்ட சச்சிதானந்தத்தினுள் பயணம்போகிற ஜீவாத்மன் நெடுநாளைக்குப் பிறகு கார் இருள் மயமான பகுதிக்கு வரக்கூடும் என்னும் ஐயம் எழ இடமில்லை. ஏனென்றால் அந்த அகண்ட வஸ்துவானது பிரகாசமாய் இருக்கிறது. பட்டப்பகலில் நாம் வெளிச்சத்தை மட்டும் காண்கின்றோம். தேடிப் பார்த்தாலும் இரவு எங்குமே அகப்படாது. அதே விதத்தில் அகண்ட சச்சிதானந்தமாய் விளங்கும் பேரறிவுப் பொருள் யாண்டும் பிரபஞ்ச அதீதத்திலுள்ள பர ஒளியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பிரகாசத்தைச் சுட்டிக் காட்டுவதற்குச் சூரியனும் சந்திரனும் மின்னலும் அக்னியும் ஆங்கு உதவமாட்டா. இவையாவையும் கடந்துள்ள பேரானந்தப் பர வெளியாய் இலங்கும் அதீத வஸ்து அதுவாம். கடலுக்குள் விழும் மழைத்துளி கடல் மயமாவது போன்று பரத்தில் கலக்கும் ஜீவாத்மன் தானே தன்னுடைய தனி வியக்தியை இழந்து பரத்தில் இரண்டறக் கலக்கிறான் என்பது இக்கண்ணியின் கோட்பாடாம்.

**14-11. கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்
[நாப் போல
விருப்புஉவட்டா இன்புஉருவை மேவுநாள்
[எந்நாளோ.**

பிரபஞ்ச அதீதத்திலுள்ள பாரமார்த்திகப் பெருநிலையைப் பிரபஞ்சமயமாயுள்ளஏதேனும் ஒன்றை உபமானமாக வைத்துக்கொண்டு ஆராய்ச்சி பண்ணுவது சாலச் சிறந்ததாம். அத்தகைய முறை இக்கண்ணியில் கையாளப்படுகிறது. கருப்பு வட்டை நாவில் போட்டால் அது சுவைக்கிறது. இது யாரும் அறிந்த விஷயமே. ஆயினும் அக்கருப்பு வட்டை நெடு நாளாக நாவில் வைத்திருக்க யாருக்குமே இயலாது. கருப்பு வட்டை ஒன்றன்பின் ஒன்றாகக் கரையக் கரைய நாவில் போட்டால் அது தன் சுவையை இழக்கும்; கசப்புத் தட்டும். இதுவே பிரபஞ்சப் பொருட்களைப் பற்றிய உண்மையாம். ஆனால் பரம்பொருளைப் பற்றிய உண்மையோ அது உவட்டாத பேரின்பமாகும். உபமானத்துக்கு எடுத்துக்கொண்ட கருப்பு வட்டுக்கோ இன்பத்தின் துவக்கம் உண்டு. பிறகு அது உவட்டுகிறது. அதைத் துப்பி விடுவதில் அதை ரசிக்கும் மானுடன் இன்பம் காண்கிறான். மற்றுப் பரவஸ்துவைப் பற்றிய பேரின்பமோ உவட்டாதது. பரம்பொருளிட மிருந்து பெறுகின்ற இன்பத்திற்குத் துவக்கமும் முடிவும் இல்லை. இதுவே பாரமார்த்திகப் பேரின்பத்தைப் பற்றிய உண்மையாம்.

**14-12. துச்சப் புலனால் சுழலாமல் தண் அருளால்
உச்சிக் கதிர்ஸ்படிகம் ஒவ்வுநாள்
எந்நாளோ.**

எதற்குத் துவக்கமும் முடிவும் உண்டோ அது துச்சம் எனப்படுகிறது. நிலையற்ற அற்ப வஸ்து என்பது அதன் பொருளாம். அத்தகைய பொருளைப் பார்த்துக்கொண்டிருப்பதும், ஆராய்ச்சி பண்ணுவதும் அறிவுடையோர்

செய்யலாகாது. ஆராய்ந்து பார்க்குமிடத்துப் பிரபஞ்ச முழுதும் பேரதிசயமாகப் புலனு கிறது. பிறகு ஆராய்ந்துகொண்டு போகப் போக அதன்கண் உள்ள கவர்ச்சி மழுங்கு கிறது. மேலும் ஆராய்ச்சி பண்ணப் பண்ண அது துச்சம் எனப் புலனுகிறது. விவேகத் தில் உச்சநிலையை எட்டியுள்ள சான்ருேர்க்கு மாயப் பிரபஞ்சம் முழுதுமே துச்சமாம். நிலை யற்ற மாயப் பிரபஞ்சப் பொருள்களில் மயங் கிக்கிடப்பது அறிவில்லார் செயலாம்.

ஸ்படிகத்தில் மகிமை யொன்று உளது. அது மாயப்பிரபஞ்சத்தின் ஒரு கூறு எனினும் தத்துவ விளக்கத்துக்குப் பெரிதும் பயன்படு கிறது. உச்சி நேரத்தில் ஒளிர்கிற சூரியன் ஸ்படிகத்தில் எங்குமே நிழலைக் காணமுடி யாது. இந்தப் பாங்கு கிட்டத்தட்ட ஆத்மப் பிரகாசத்துக்கு ஒத்ததாக விருக்கிறது. ஆத்மா ஜடப்பொருள் அன்று. ஆதலால் அதற்கு வடி வம் இல்லை. மேல், நடு முதலிய பாகங்களும் அதற்கு இல்லை. அது யாண்டும் தன்மயமா யிருக்கிறது. உலகப் பொருள்களைப் பயன் படுத்துமிடத்து அதனுல் உண்டாகின்ற பயனை வேண்டியவாறு விளக்கலாம். பிறகு அது பயனற்றுப் போகுமிடத்து அதனிடத்து விரக்தி யும் வேண்டியவாறு வந்தமைகிறது.

மற்றுப் பரம்பொருளைப்பற்றிய அனுபூதி அத்தகையதன்று. அனுபூதியடையப் பெறு கிற பொழுதே அப்படி அடைதல் என்னும் நிலையை மனிதன் புதிதாகப் பெற்றவன் அல் லன் என்பது விளங்குகிறது. அது ஆதியந்த மில்லாத வஸ்து. அதைச் சென்றடைவது என்பது இல்லை. யாண்டும் அது தன்மயமாய் இருக்கிறது என்பது வியப்புக்குரிய விஷய மாம்.

14-13. இம்மா நிலத்தில் இருந்தபடி யேஇருந்து
சும்மா அருளைத் தொடருநாள் எந்நாளோ.

இவ்வுலகைப்பற்றி இரண்டு கொள்கைகள் உள. ஒன்று உடன்பாடானது. மற்றது எதிர்மறையானது. எதிர்மறைக் கோட்பாட் டில்தான் திண்டாட்டத்துக்கு ஏதுவானதும், போராட்டங்கள் பல அமையப்பெற்றதும் ஆகியவைகள் நிறைந்துள. உடன் பாட்டுக் கோட்பாடு அத்தகையதன்று. ராஜ வீதியில் வசதிகள் அனைத்தும் அமையப்பெற்ற பய ணத்துக்கு நிகரானது உடன்பாட்டு முறை. மற்றதோ கல்லும் முள்ளும் சேர்ந்த கடினமான பாதைக்கு நிகரானது. மேடு பள்ளங்கள் பல உள்ளன. பாதையில் திண்டாடித் திணறிக் கொண்டு பயணம் போகவேண்டும். இவ்வுலக வாழ்க்கையைப் பொல்லாங்கு மிகப்படைத்தது எனக் கருதுகின்றவர்கள் இந்தக் கடினமான பாதையில் பரத்தைநோக்கித்திண்டாடித் திண றிப் பயணம் போகின்றனர். மற்றது அத்தகைய தன்று. அதை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இன்பமாளிகை என்கின்ருர். அதாவது நல்ல பக்தன் ஒருவனுக்கு இப்பிரபஞ்ச வாழ்வா னது பரத்தை நோக்கிச் செல்லுவதற்கு வசதி கள் யாவும் வாய்க்கப்பெற்றதாம். இந்த இனிய பாதையை நம் அண்ணல் “நான் அது வாயிருக்க நீ செய் விசித்திரம் மிக நன்று காண்” என்கிருர். அவர் தாமே ராஜரீதியி லும் பிரபஞ்ச வாழ்க்கையை நடாத்தியிருக் கின்ருர். பாமரன் போன்று கஷ்டங்கள் பலவற் றையும் அனுபவித்தும் இருக்கின்ருர். ஆத லால் அவர் இரண்டுவித மார்க்கங்களையும் உள்ளபடி எடுத்து விளக்க வல்லவராயிருக் கின்ருர்.

வைராக்கிய உள்ளம் படைத்தவர்கள் உலகம் தரும் சுகத்தில் நாட்டம் கொள்வ தில்லை. அவர்கள் உலகத்தில் போகம் அனு பவிக்க விரும்புவதில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் அமையும் வசதிகளையெல்லாம் பிறர் நலனுக்காகப் பயன் படுத்துகின்றனர். தங்களுக்கென்று அவ்வசதிகளைப் பயன் படுத் திக் கொள்வதில்லை. அவர்களுக்கு இப்பிரபஞ் சம் இனிய பாதையாக இருக்கிறது. மற்ற வர்களுக்கோ இப்பிரபஞ்சம் துன்பம் தருவ தாக இருக்கிறது. உலகிலிருந்து விலகியிருந்து தங்களை வருத்திக்கொள்ளும் நிலையில் பர வாழ்வு வாழத் திண்டாடுகின்றனர்.

ஆக இந்த இரண்டுவித மார்க்கங்களையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் அவ ருடைய பாடல்களில் ஆங்காங்குத் தென்படும் முரண்பாடுகளுக்கு விளக்கம் காண்பது எளி தாம். இரண்டுவித மார்க்கங்களையும் கண்டு அவர் நன்கு அனுபவித்திருப்பதால் அவரு டைய கோட்பாடுகள் ஆத்மசாதகர்கள் எல் லார்க்கும் உடன்பாடு உடையனவாம்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-18

புத்தகங்கள் பிரசுரிப்பதில் பலர் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர். ஏற்கனவே வெளியே வந்துள்ள புத்தகங்களுக்குக் கணக்கு இல்லை. புத்தகங்களைப் பிரசுரிப்பதால் பெரு நலன் வந்துவிடாது. அதற்கு மாறாகப் பத்திரிகை ஒன்று பிரசுரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருவாயாக. பத்திரிகையின் நோக்கம் கீழ்த்தரமாகப் போகலாகாது. ஒருவரை ஒருவர் தாக்குதலில் பத்திரிகைகள் பல தங்கள் ஆற்றலை வீண்விரயம் பண்ணுகின்றன. யாரையுமே தாக்குதல் நம்முடைய நோக்கமன்று. பயன்படக்கூடிய உடன்பாட்டுக் கருத்துக்களையே நாம் பிரசுரிக்கும் பத்திரிகையில் மக்களுக்கு நாம் எடுத்து வழங்கவேண்டும். மக்களுக்கு நீ எடுத்துச் சொல்லவேண்டிய உடன்பாட்டுக் கருத்துக்களைமட்டும் பத்திரிகையில் எடுத்து வெளியிடு. பிறர் புரிகின்ற செயல்களை ஆராய்ச்சி பண்ணுவதும், அவதூறு கூறுவதும் நம்முடைய நோக்கமாயிருக்கலாகாது. அறநெறிக்கு உடந்தையாயுள்ள கருத்துக்களை மட்டுமே உறுதியாகவும், தெளிவாகவும் நாம் மக்களுக்கு எடுத்து வழங்க வேண்டும். அதன் விளைவு எத்தகையதாக வேண்டுமானாலும் இருக்கட்டும். மக்களுக்குப் பயன்படுகின்ற நல்ல கருத்துக்களே ஈசனுக்கு உரியவைகள் ஆகின்றன. அத்தகைய மேலாம் கோட்பாடுகளை ஐயம் திரிபு அற மக்களிடத்து எடுத்து வழங்குவது கடவுளுக்குப் பண்ணுகிற பணிவிடை ஆகிறது. அமைதியாகவும், உறுதியாகவும் அத்தகைய செயலில் ஈடுபடுவோம். அதன் விளைவாக நலன் ஏதேனும் விளையுமானால் அதுவும் ஈசன் செயலே. தூய உள்ளம் படைத்துள்ள தொண்டர்களாக இருந்து கொண்டு நாம் புரியவேண்டிய பணிவிடைகளை அமைதியாக ஆற்றிவருவோமாக.

நாம் கடைப்பிடிக்கும் நல்வழி கிறிஸ்தவ பாதிரிமார்களுக்குப் பிடிக்காது. அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். என்னைத் தாக்கி அவர்கள் எழுதுகிற கட்டுரைகளை மேலும் எனக்கு அனுப்பவேண்டாம். தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் அவர்கள் நம்மைத் தாக்கிப்பிரச்சாரம் செய்துகொண்டிருக்கட்டும். அத்தகைய பொருளற்ற பிரச்சாரங்களை நாம் காதில் போட்டுக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. நான் அத்தகைய பொய்ப் பிரச்சாரங்களைக் காதில் போட்டுக்கொள்ளாதிருப்பதைக் குறித்து இங்குள்ள அமெரிக்கப் பெருமக்கள் என் போக்கைப் பெரிதும் பாராட்டுகிறார்கள். அங்கு நல்வழியில் பணியாற்றி வருகின்ற நீங்கள் எல்லாரும் என் செல்வர்கள் ஆகின்றீர்கள். தீமை எதற்கும் நீங்கள் அஞ்சவேண்டாம். துணிந்து நல்வழியில் பணிவிடைபுரிந்து வாருங்கள். அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாய் இருங்கள். சிங்கக்குட்டிகள் போன்று ஆண்மையிலும் உறுதிப்பாட்டிலும் ஊறியிருங்கள்.

இந்திய மக்கள் இப்பொழுது உறங்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த உறக்கத்தினின்று அவர்களைத் தட்டி எழுப்புவது நம்முடைய முதல் கடமையாகிறது. பிறகு உலக மக்கள் எல்லாரையும் அஞ்ஞான உறக்கத்தினின்று தட்டி எழுப்ப நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னதைச் செய், இன்னதைச் செய்யவேண்டாம் என்று நான் உங்களுக்குப் புகட்டுவது பொருந்தாது. நலன் தரும் கருத்துக்கள் அனைத்தையும் மக்களுக்கு எடுத்துப் புகட்டுவது நம கடமையாகும். வஜ்ரம் போன்ற உள்ளம்படைத்தவர்களாக இருப்பீர்களாக. குருபக்தி படைத்திருக்கும் நல்ல மாணாக்கன் ஒருவனுக்குப் பேராற்றல் தானாகவே வந்து வாய்க்கிறது. தொண்டன ஒருவன் வாழ்வையும் மரணத்தையும் பொருள்படுத்துகிறதில்லை. துணிந்து வினையாற்றுதலிலேயே அவன கண்ணும் கருத்துமாயிருக்கிறான். அத்தகைய மாறாத குருபக்தி வாய்க்கப் பெற்றவனுக்கே இறைவனருள் வந்தமைகிறது. பாராட்டுதற்குரிய தகைமை உங்கள் எல்லாரிடத்திலும் இருக்கிறது. இதில் நான் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறேன். நீங்கள் எல்லாரும் என்னிடம் வைத்துள்ள குருபக்தியை நான் நன்கு அறிய வருகிறேன். ஆதலால் தூக்கி வினையாற்றுங்கள். வெற்றி உங்களுக்குரியதாம். நீங்கள் எடுத்துக்கொள்கின்ற முயற்சி ஒவ்வொன்றுக்கும் அடிப்படையில் என்னுடைய ஆசியும் அனுக்கிரஹமும் உங்களுக்கு உண்டு.

ஞான வெட்டியான் - 19

ஆழ்ந்த அன்பு தொண்டாக வடிவெடுக்கிறது. தாய் தன் குழந்தைக்குச் செய்யும் தோட்டித் தொழில் இதற்குச் சான்ருகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் இருந்தது போன்றே ஸ்ரீசாரதாதேவியாரிடமும் ஜாதி வித்தியாசம் இருக்கவில்லை. கீழ்நாடு,மேல்நாடு ஆகிய உலக முழுதும் உள்ள மக்களைத் தமக்குச் சொந்த மானவர்களாகவே சாரதாதேவியார் கருதி வந்தார். ஒரு நாள் மாது ஒருத்தி தன் குழந்தையுடன் இந்த அருள் அன்னையிடம் வந்தாள். அன்னையாரோ அன்புடன் அக்குழந்தையை வாங்கித் தம் மடியில் அமர்த்திக்கொண்டார். சிறிது நேரத்திற்குள் அக்குழந்தை அன்னையாரின் மடியில் மலமும் மூத்திரமும் கழிந்தது. இச்செயலைப்பார்த்த மற்ற மாதர்கள் அக்குழந்தையை அன்னையாரிடம் கொடுத்த தாயின்மீது சீறி விழுந்தார்கள். அதற்கு முக்கியமான காரணம் ஜாதியிலே அவள் கீழ்க்குலத்தைச் சேர்ந்தவளாகவிருந்தாள். அன்னை சாரதா தேவியார் உள்ளத்தில் மட்டும் ஜாதி வேற்றுமைக்கு இடமில்லை. சீறிவிழுந்தவர்களைச் சமாதானம்செய்துவிட்டுத் தாமே அக்குழந்தை கழிந்த மலத்தைச் சுத்தம் செய்தார். அன்னையார் படைத்திருந்த இந்தத் தூய மனப்பான்மை மக்கள் பலரிடத்து வந்து அமையுமாயின் நம் நாடு அருள்துறையிலே மகோன்னதநிலையை அடையும் என்பது திண்ணம்.

அமெரிக்காவினின்று திரும்பி வந்த பிறகு சுவாமி விவேகானந்தர் பேலூர் மடத்தினின்று ஹௌரா பக்கம் நடந்து போய்க்கொண்டிருந்தார். மானுடன் ஒருவன் காலரா அல்லது வாந்திபேதி நோய்க்கு உட்பட்டு ஒரு மரத்தடியில் பிரக்ஞை இழந்து படுத்துக்கிடந்தான். அவன் அணிந்திருந்த உடைமுழுதும் வாந்தியாலும், மலத்தாலும் படிந்துகிடந்தது. சிறிதேனும் அதைப் பொருள்படுத்தாது சுவாமிகள் அவனைத்தூக்கித் தம் தோளில் போட்டுக்கொண்டுபக்கத்திலிருந்த நீர்க்குழாய் அண்டை போனர். அவனைச் சுத்தப்படுத்தினர். பக்கத்திலிருந்த வீட்டாரிடம் வெள்ளை வஸ்திரம் வாங்கி அதைக்கொண்டு அம்மனிதனுக்கு அணிவித்து அருகிலிருந்த ஒரு டாக்டரிடம் அவனைத் தூக்கிக்கொண்டுபோய் ஒப்படைத்தார். ஆகிற செலவெல்லாம் தாம் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லிவிட்டுத் தாம் கங்கை நதிக்குச் சென்று நீராடிவிட்டு ஈரவஸ்திரத்துடன் மடத்திற்குத் திரும்பி வந்தார். சுவாமிகள் படைத்திருந்த அந்த மனப்பான்மையைத் தொண்டர்கள் படைப்பார்களானல் நம் நாட்டைச் சீரியதேவலோகமாகச் செய்ய நமக்குச் சாத்தியமாம்.

நாட்டுக்குப் பணிவிடை செய்யும் தொண்டர்கள் குழாம் கிராமந்தோறும்அமையவேண்டும். அவர்களுள் முறை வைத்துக்கொண்டு ஒவ்வொரு தொண்டனும் வாரத்தில் ஒருநாள் மாலை நேரம் தோட்டி போன்று தொண்டுபுரிய முன்வருவது அவசியமாகையால் கொத்தோ, மண்வெட்டியோ எடுத்துக்கொண்டு முறையாக ஊர்ப் பக்கம் சுற்றிப்பார்க்கவேண்டும். வீதிகளிலும், ஊரைச் சுற்றிலும் தென்படுகின்றமலத்தின்மீது மண்ணை வெட்டிப்போட்டு அதைச் சுத்தம் பண்ணவேண்டும். இச்செயல் நாள்தோறும் நடைபெறுமானல் ஒரே வாரத்தில் ஊர் எங்கும் நிறைந்திருந்த துர்நாற்றம் மறைந்துபட்டுப் போவது திண்ணம்.

மற்ருெரு செயல் செய்தல் அவசியம். ஒவ்வோர் ஊரிலும் பண்ணையில் உள்ள கால் நடைகளைப் பாதுகாத்தல் பொருட்டுப் பட்டிப் படல் கட்டி வைத்திருப்பார்கள். ஒவ்வொரு படலும் எங்குத் தூக்கி வைத்தாலும் கீழே விழாது நின்றுகொண்டிருக்கும். அதே முறையில் பழைய தகரங்களைக்கொண்டு மலஜலம் கழிவதற்கான பட்டிலை அமைக்கலாம். அப்படி அமைத்தான பிறகு மண்வெட்டியைக் கொண்டு சிறு சிறு குழியை வெட்டியெடுக்கலாம். ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஏற்ற மறைப்புகளை இங்ஙனம் அமைத்து வைக்கலாம். வெட்டியெடுத்த குழிக்குள் மலம் கழிந்து விட்டுப் பக்கத்தில் குவியலாயிருக்கும் மண்ணைக் காலால் தள்ளி மூடிவிடலாம். இத்தகைய செயலைச் செய்யும்படி தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று மக்களிடம் பணிவுடன் வேண்டிக்கொள்ளலாம்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

171. महोत्साह மஹோத்ஸாஹ — உத்சாகமே வடிவெடுத்தவர்.

மக்களுடைய பரிபாகமும், பண்பாடும் அவரவர் படைத்துள்ள உற்சாகம் அல்லது ஊக்கத்தினின்று வெளியாகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் மக்களுள் அமைந்துள்ள குணபேதமேயாம். பிறப்பினின்று தமோ குணத்தில் ஊறியிருப்பவர்களிடத்து உத்சாகத்தைக் காண்பது மிக அரிதாம். ஜடநிலை அல்லது செயலற்றுக் கிடக்கும் பாங்குதான் அவர்களிடம் பெரிதும் தென்படுகிறது. இந்நிலை பாராட்டுதற்குரியதன்று. முன்னேற்றம் எதையும் தமோகுணத்தில் ஊறியிருப்பவர்களிடம் காண முடியாது.

மற்று, ரஜோகுணத்திலிருப்பவர்கள் தொடுத்த கர்மத்தைப்படபடப்புடன் செய்வார்கள். ஆனால் அதிவிரைவில் அன்னவர்களின் ஊக்கம் குறைந்துபட்டுப்போம். சாதிப்பதற்கென்று எடுத்துக் கொண்டுள்ள கர்மம் நல்லதாயிருக்க வேண்டும். அது மக்களுடைய முன்னேற்றத்துக்கு ஏதுவானதாகவிருப்பது அவசியம். அத்தகைய நல்வினையில் ஈடுபடுபவர்கள் சாத்வீக குணம் படைத்திருப்பார்களாகில் அக்கருமம் தொடர்ந்து நடைபெறும். மக்களும் அக்கர்மத்தினின்று நலன்கள் பல அடையப் பெறுவார்கள். அதற்கேற்ற மனப்பான்மையும் விடாமுயற்சியும் படைத்திருப்பதைத் தெய்வ சம்பத்து எனலாம்.

பரம்பொருள் தாமே பிரபஞ்சத்தை நடாத்தும் முறையில் ஈடுபட்டிருக்கிறார். அவருடைய செயலில் குறையோ பிற்போக்கோ எதையும் காணமுடியாது. நடைபெற வேண்டிய கர்மங்களனைத்தும் முறையாக நடைபெறுகின்றன. அவைகளைத் தொகுத்து ஆராயுமிடத்துப் படைத்தல், காத்தல், துடைத்தல் ஆகிய மூவிதக்கர்மங்களில் அவர்களுடைய நிர்வாகம் முழுதும் அடங்கியுள்ளன. அவையாவும் காலந்தவறாது நிகழ்ந்து வருகின்றன. அந்தந்த மனிதனுடைய தரத்துக்கும் பரிபாகத்துக்கும் ஏற்றவாறு அவைகள் நிகழ்கின்றன. குறைபடுதலையும் வரம்பு கடந்து போதலையும் பரமனுடைய உற்சாகத்தில் காண்பது அரிதிலும் அரிதாம். பரமனிடத்துள்ள இந்த மேலாம் பாங்கைப் பின்பற்றுவது பரமனுக்குச் செய்கின்ற வந்தனை வழிபாட்டுக்கு ஒப்பாகும்.

172. महाबल: மஹாபல: — வலிவு மிகப் படைத்தவன்.

பரமன் பிரபஞ்சமயமாயிலங்குகின்றான். அப்படி இலங்குகின்றவன் வாயிலாக அவனுடைய திட்பமும் உறுதிப்பாடும் வெளியாகின்றன. காற்றாக அவன் இலங்குகின்ற பொழுது அது சூறாவளியாக வடிவெடுக்குமாகில் அதனால் மக்களுக்கு விளையும் கஷ்ட நஷ்டத்திற்கு அளவில்லை. சான்றுஒன்றுஎடுத்துக்கொள்ளுவோம். மக்கள் பெரும் சிரமப்பட்டு வாழை சாகுபடி பண்ணுகிறார்கள். இன்னும் சில வாரங்களில் அச்சாகுபடியினின்று ஏராளமாக ஊதியம் பெறுவார்கள். ஆனால் வாயுபகவானுடைய போக்கை யாரே அறிய வல்லவர். ஒரு நொடிப் பொழுதில் அத்தனை வாழை மரங்களையும் ஒடித்துப் பாழ்படுத்தும் வல்லமை அவனுக்கு உண்டு. ஆதலால் வாயுபகவானாக வடிவெடுத்து விளையாடும் பரம்பொருளிடத்து ஒருக்ஷணத்தில் மக்களுக்கு ஊறு செய்யும் திறமையும் அடங்கியிருக்கிறது. இனி காற்றாக விளையாடும் பரமன் நெருப்பாக விளையாடுமிடத்து ஊர்களையும், வனங்களையும் அதிவிரைவில் தகித்துத் தள்ளிவிடுவான். அதே போன்று பெரு மழையாக வடிவெடுத்து வந்தால் அதனால் மக்கள் படும்பாடு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. இதற்கெல்லாம் மேலாகப் பூகம்பம் அல்லது நிலத்தின் அசைவாக அவன் வடிவெடுப்பானாகில் அது ஸம்ஹார தாண்டவமாக மாறிவிடும். எனவே பரமன் படைத்திருக்கின்ற பலத்துக்கு அளவு இல்லை. மக்கள் யாண்டும் அவனுடைய அனுக்ரஹத்தைச் சார்ந்திருத்தல் வேண்டும். கிருபை கூர்ந்து தன் வல்லமையை அவன் அளந்தெடுத்துக் கையாள்வானாகில் அது உலகுக்கு நலன். அப்படியல்லாது தன் வல்லமையை வெளிப்படுத்தும் விளையாட்டில் அவன் மிகைபட அல்லது குறைபடத் திருவுளம்கொள்வானாகில் அது உலகுக்கே கேடாய் முடியும். ஆதலால் இறைவனிடம் பிரார்த்தனை பண்

ணும் உயிர்கள் தன் வல்லமையை வெளிப் படுத்தும் விஷயத்தில் அவன் உலக க்ஷேமத் தைப் புறக்கணித்து விடலாகாது என்று பிரார்த்தனை பண்ணுவது உசிதம். அத்துடன் மக்களும் தாங்கள் கடைப்பிடிக்கின்ற அற நெறியினின்று பிறழாதிருக்கக் கடமைப்பட் டிருக்கின்றனர். ஜீவப்பிரயத்தனமும் ஈசன் அருளும் சேர்ந்தே அமையவேண்டும்.

173: महाबुद्धिः மஹாபுத்தி: பேரறிவு படைத் தவன்.

இறைவன் பிரபஞ்சமாக இலங்குகிறான் என்பதற்குச் சான்று அப்பிரபஞ்சத்தின் கண்ணே அமைந்திருக்கிறது. அனந்தங் கோடி உயிர்களாக வடிவெடுத்திருக்கின்ற இறைவன் அந்தந்த உயிர்களுக்கேற்ற அறிவா கவும் இலங்கி வருவது பேரதிசயமாம். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். மக்களுக்கிடை யில் வாழ்ந்து வரும் காக்கை படைத்திருக்கும் அறிவு அலாதியானது. குழந்தை யொன்று காக்கை ஒன்றை விரட்டியோட்டினால் அதற் கேற்றவளவே அக்காக்கை முயற்சி எடுத்துத் தன்னைக்காப்பாற்றிக்கொள்ளும். தடியால் விரட்டியோட்ட முதியோர் முயன்றால் அதற் கேற்றவளவு முயற்சியைக் கையாண்டு அது தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்கிறது. இனி துப்பாக்கியுடன் மானுடன் ஒருவன் தென்பட்டால் அது காட்சியினின்று மாயமா கப் பறந்து ஓடிவிடும். இங்ஙனம் உயிர்வகை களிடத்து அறிவாக இலங்குகின்ற ஈசன் அந் தந்த உயிருக்கேற்ற வடிவெடுத்துத் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதும் மற்ற உயிர்கள் மீது தேவை ஏற்படுகின்றபொழுது ஆக்ரமிப்பதும் வியப்புக்குரிய விஷயமாம். இங்ஙனம் பரமன் படைத்துள்ள பேரறிவு பிரபஞ்சமெங்கும் இலங்கி வருவதை ஆராய்கின்றவன் அன்ன வனுக்கு வணக்கம் செலுத்தாது வேறு என்ன தான் செய்ய முடியும்?

174. महावीर्यः மஹாவீர்ய:

வீர்யமுடையவன் சீலத்திலும் மிகச் சிறந்த வனாகவிருப்பது அவசியம். ஆக்கத்துக்கு ஏது வான வல்லமை மிகப் படைத்தவன் வீரன். அன்னவன் இந்திரியங்களனைத்தையும் வென்ற வனாயிருத்தல் அவசியம். விளையாட்டுப் போன்று உலகுக்கு நலன் தருகின்ற செயல் கள் பலவற்றைச் செய்து சாதிக்க வல்லவன் வீர்யம் படைத்தவனாகின்றான். இச்சிறப்பு முழுதும் பரம்பொருளுக்கே உரியதாம்.

175. महाशक्तिः மஹாசக்தி: சக்தி மிகவாய்க் கப்பெற்றவன்.

பரம்பொருள் சக்திமானாய் இருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. சக்தியற்ற மானுடன் ஒருவன் 'நான் கிடக்கிறேன் சிவனே என்று; என்னை உபத்திரவப்படுத்த வேண்டாம்' என்று இயம்புவது உலக வழக்கு. உல கத்தவர்களுள் சக்தியற்றவனாய் இருப்ப வன் ஒன்றுக்கும் உதவான். ஆற்றல் மிகப் படைத்திருப்பது அவசியம். அந்த ஆற்றலைத் தீவிரமாக நல்வழியில் பயன்படுத்துவது மிக மேலானதாம். பரம்பொருள் தாமே சக்தி மானயிருந்து உலக மக்கள் உலகில் எங்ஙனம் வாழ்ந்திருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாகிறான்.

176. महाद्युतिः மஹாத்யுதி: ஒளி மிக வாய்க் பெற்றவன்.

காரியம் ஒன்றை வெற்றிகரமாகவும், நல்ல பாங்கிலும் செய்து முடிக்கின்ற மனிதனுடைய முக விலாசத்தில் ஒளி ததும்பிக்கொண்டிருப்ப தைப் பார்க்கிறோம். அத்தகைய த்யுதி (द्युति) பரம்பொருளுக்குரியதாம். அவனுடைய சொரு பமே ஒளிமயம். வேறு யாரிடத்திருந்தும் அவன் ஆற்றலையோ ஒளிப்பிழம்பையோ நாடிச் செல்லவேண்டிய அவசியமில்லை. ஏனென் றால் பரம்பொருளின் பேராற்றலும் அதன் விளைவாக அவனிடத்து ஒளிர்ந்துகொண்டிருக் கும் பிரகாசமும் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டவைகளாம். பரம்பொருளை நன்கு உபா சிப்பதற்கேற்ப மனிதனிடத்தும் இந்த பேரமைப்பு வந்தமைகிறது.

177. अनिर्देश्यवपुः அநிர்த்தேச்யவபு: விளக்கு தற்கரிய மகிமையுடையவன்.

பரம் பொருளுக்குச் சொந்தமாயுள்ள பெரு மைகளில் சிலவற்றை மனிதன் பிறர்க்கெடுத்து விளக்கமுடிகிறது. வேறுசிலவற்றை அவன் ஏகதேசம் அறியவருகிறான். இன்னும் சில வற்றைக் கண்டு திகைக்கின்றான்; ஆனால் விளக்க முடிவதில்லை. பரமனிடத்துள்ள அத் தகைய பெருமையை இந்த நாமம் ஏகதேசம் விளக்கியும் விளக்காமலும் இருக்கிறது.

போசலபாவா சரிதம்

பண்டரிபுரத்துக்குச் சமீபத்தில் பால்காடு என்னும் ஊர் உள்ளது. அது வளமிக்க ஊர். அவ்வூரில் பக்தி நிறைந்த மக்கள் இருந்தனர். தாங்கள் பயிரிட்டு அறுவடை செய்த தானியங்களைத் தங்களுக்கே வைத்துக்கொள்ளாது விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், பகவத்காரியங்களுக்கும் பயன்படுத்தி வந்தார்கள். யாராவது ஒருவர் வாழ்வில் நஷ்டம் அடைந்து நொந்துபோனால் அவ்வூர் மக்கள் அனைவரும் சேர்ந்து அவரைக் கைதூக்கி விடும் தர்ம சிந்தனை உடையவர்களாக இருந்தார்கள். பெருமை பொருந்திய அம்மக்களில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு வகை வர்ணங்களுள் வேளாளர் மரபில் போசலபாவா என்னும் பெயர் படைத்த பெரியார் ஒருவர் இருந்தார். அவருக்கு ஆயிரம் வேலி நிலம் இருந்தது. செல்வம் மிகுதியாக இருந்த பொழுதிலும் அவரிடம் அகம்பாவத்தின் அறிகுறி ஏதும் இல்லை. ஐஸ்வரியம் அவரிடத்தில் அதிகரிப்பதற்கு ஏற்ப சாதுத்தன்மையும் அவரிடம் அதிகரித்து வந்தது. பாண்டுரங்கனைப் பக்தியுடன் போற்றி வந்தார். அவருக்கு மமதாபாய் என்னும் பெயருடைய மனைவி இருந்தாள். அவள் கற்புமிக உடையவள். விருந்தோம்பும் உள்ளம் படைத்தவள். எத்தகைய வறுமை வந்து வாய்த்தாலும் தர்மம் செய்யும் தன் கடமையிலிருந்து தவறமாட்டாள். பழிக்கு அஞ்சுபவளாகவும், நாணம் உடையவளாகவும், கணவனிடம் பக்தி உடையவளாகவும் அவள் விளங்கினாள்.

பண்டரிநாதன் அருளால் இவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஏமாஜி என்ற நாமம் வைத்தார்கள். கல்விப் பருவம் வந்ததும் கல்விப் பயிலப் பள்ளிக்கு அனுப்பிவைத்தனர். ஏமாஜி தன் குலத் தொழிலாகிய விவசாயத்தில் மிக ஊக்கம் கொண்டிருந்தார். எனவே விவசாயத்தை மிகத் திறமையுடன் செய்தார். விவாகத்துக்கு ஏற்ற வயது வந்ததும் பாஹிரதிபாய் என் பவளைப் பெற்றோர்கள் அவருக்கு விவாகம் செய்து வைத்தனர். கணவனும் மனைவியும் தந்தையும் தாயும் போலவே இல்லறத்தை நன்கு நடாத்தி வந்தனர். தந்தை போசல பாவா பகவத் பக்தியில் மிகவும் ஈடுபாடு உடையவராய் இருந்ததால் ஏமாஜி தாமே வீட்டுக்காரியங்கள் விவசாயம் அனைத்தையும் சாமர்த்தியமாக நடாத்தி வந்தார்.

போசலபாவா ஏகாதசிதோறும் விரதம் இருப்பார். அன்று ஜலமும் அருந்தாது பண்டரி நாதனைப் பூஜித்து வருவார். ஏகாதசி இரவு உறங்காது ஊரிலுள்ள பஜனைக் கோஷ்டியினருடன் பண்டரிநாதனைக் குறித்துக் கீர்த்தனங்கள் பாடி மகிழ்ச்சி அடைவார். பொழுது புலர்ந்ததும் அதிதிகளுடன் உணவு எடுத்துக் கொள்வார். தசமி நாளன்று தம் குடும்பத்தாருடன் வண்டிகளில் சாமான்களை ஏற்றிக் கொண்டு பண்டரிபுரம் சென்று தங்குவார். ஏகாதசியன்று குடும்பத்தார் அனைவரும் சந்திர பாவா நதியில் ஸ்நானம் செய்து பண்டரி நாதனைத்தரிசித்துப் பக்தர்களுடன் சேர்ந்து பஜனைசெய்து பகலையும் இரவையும் திருக் கோயிலிலேயே கழிப்பார்கள். ஏகாதசி இரவு முடிந்ததும் விடியற்காலையில் நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு அன்னம் அளித்து எஞ்சியதைத் தாம் உண்பார். ஏமாஜி பிறந்த பின் இக்கைங்கரியத்தைப் பன் மடங்கு விமரிசையாக நடத்தினர்.

ஒரு சமயம் தம் ஊரிலும் சுற்றுப் புறங்களிலும் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் உண்பதற்கு உணவின்றித் துடிதுடித்தனர். மக்களின் பரிதாப நிலையைக்கண்டு போசலபாவா மனம்உருகிப்போனர். அப்பொழுது தம் களஞ்சியத்தில் தானியம் இருந்தது. "இந்த ஆபத்துக்காலத்தில் பாண்டுரங்கன் சொரூபங்களாக விளங்கும் மக்களுக்கு உதவாது தாம் செல்வம் படைத்திருப்பதில் பயன் என்ன? மக்களுக்கு உணவு கொடுத்து அவர்கள் மகிழ்ச்சி அடைவதைக்கண்டு நாம் பூரிப்பு அடைவதுதான் உண்மையான மகிழ்ச்சியாகும். கடவுள் ஏழை பங்காளன் அல்லவா? ஏழைகளுக்கு உதவாது பாபியாக இருப்பது தகுமோ?" இங்ஙனம் எண்ணியவராய்த் தம்மனைவி, மகன், மருமகள் ஆகியோரைப் பார்த்துக் கூறியதாவது: "என் அன்புக்கு உரியவர்

களே! நாம் பெறுதற்கரிய செல்வம் படைத்திருக்கின்றோம். அதைத் தர்ம நெறியில் செலவழிக்கின்றோமா என்பதைப் பகவான் கண்காணித்து வருகின்றார். மானுட ஜன்மம் மிகவும் அருமையானது. இந்த உடலை யமன் கொண்டு போவதற்கு முன்பு தர்மத்தை ஏராளமாகச் செய்து விடுவோம். நம் பொருளைப் பலருக்கும் வழங்கி அவர்கள் மகிழ்வடைவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவோம். ஆலம் விதை சிறியதாக இருந்தாலும் அது மரமாக வளர்ந்து பல்லோர் தங்குவதற்கு நல்ல நிழலைத்தருகிறது. தர்மம் சிறியதானாலும் அது தக்கவர்க்குச் செய்யப்படுமானால் அதன் பயன்வானத்தினும் பெரியதாகும். மகாபலிச் சக்கரவர்த்தியினிடத்துப் பகவான் வாமனனாகச் சென்று மூன்று அடி மண் கேட்டார். மகாபலியும் அவர் கேட்டதைத் தந்தார். அவர் விண்ணையும் மண்ணையும் ஈரடிகளால் அளந்து விட்டுப் பலிச்சக்கரவர்த்தியின் தலையில் மூன்றாவது அடியை வைத்தார். தானம் சிறியதானாலும் தானம் பெற்றவன் தக்கவனானதால் அந்தத் தானம் மகிமை பொருந்தியதாயிற்று. நம்மிடத்தில் அளவற்ற தானியம் இருக்கிறது. பசியில் வாடும் மக்களுக்கு நாம் அதைக்கொண்டு உதவினால் நாம் பெற்றுள்ள செல்வம் பயனுடையதாகும். அவ்விதம் செய்யாது போனால் நாம் மேன்மை அடைய முடியாது. பொருள் படைத்திருப்பவன் தானும் அனுபவியாது உலகத்தவர்க்கும் கொடுக்காது வைத்திருப்பானாகில் அவன் படைத்துள்ள பொருள் அவனைக்கண்டு நகும். உலகத்தவரும் அவனைக் கண்டு சிரிப்பர். செல்வம் துன்பத்திற்கே இருப்பிடம். செல்வத்தைத் தேடுவதில் துன்பம் இருக்கிறது. அதைப் பாதுகாத்து வைப்பதிலும் கஷ்டம் இருக்கிறது. செல்வம் குறைந்தாலோ அழிந்து பட்டுப்போனாலோ அதைக் குறித்துத் துன்பம் ஏற்படும். அதைப் பிறர்க்குக் கொடுத்தால் மகிழ்ச்சி உண்டாகும். நம் செல்வத்தைக் கொண்டு நாம் மட்டும் உண்டு களித்திடாது பட்டினியால் வாடும் மக்களுக்குக் கொடுத்தால் பாண்டுரங்கனின் கிருபைக்கு நாம் பாத்திரமாவோம். இது என் கருத்து. உங்களுடைய கருத்தைத் தெரிவியுங்கள்" என்று கேட்டார்.

அவர்கள் கூறியதாவது: "தேவரீர், வாசகம் கேட்டு மனம் பரிசுத்தம் அடைந்தோம். தேவரீர் எதைச் செய்தாலும் அது எங்களுக்குச் சம்மதமே. நீங்கள் செய்யும் தர்மத்தின் தன்மையை விளக்கி எங்களுடைய அறியாமையைப் போக்கி விட்டீர்கள். இன்று முதல் நீங்கள் எதைச் செய்தாலும் நாங்களும் அதில் பங்கு கொள்வோம்."

போசலபாவா மிக்க மகிழ்ச்சி உடையவராய் பஞ்ச நிவாரண வேலையில் இறங்கினார். ஒரு நாளைக்கு மூன்று வேளை பல்லாயிரம் ஜனங்களுக்குக் கஞ்சி வார்த்தார். தூரத்தில் இருந்து வரும் ஜனங்களுக்குத் தானியங்களை அளந்து கொடுத்தார். உள்ளூர் மக்களுக்குக் கஞ்சி கொடுத்து உதவியதோடு விவசாயத்துக்கு உதவும்படியான கால்வாய், ஏரி முதலியவைகளைக் கட்டிவித்து வேலை இல்லாத மக்களுக்கு வேலையும் கொடுத்துக் கூலியும் கொடுத்தார். அவர் கஞ்சி வார்த்ததில் களஞ்சியம் காலி ஆயிற்று. ஆனால் அவர் மனம் சலிப்பு அடையவில்லை. தாமே கூலி வேலை செய்தார். தாமும் தம் மகனும் காட்டுக்குச் சென்று விறகு வெட்டிக்கொண்டு வந்து அதை விற்பதால் வரும் சிறு சம்பாத்தியத்தைக் கொண்டு குடும்பத்தைப் பராமரித்து வந்தார்கள். வறுமை அதிகரித்துக்கொண்டே வந்தது. வறுமை அவரிடம் அதிகரிக்கப் அதிகரிக்க பண்டரிநாதனிடம் பக்தியும் அதிகரித்து வந்தது. பண்டரிநாதனை ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பூஜித்து வந்தார்.

தசமிதோறும் ஏராளமான சாமான்களுடன் பண்டரிக்குச் சென்று ஏகாதசி விரதம் இருந்து துவாதசி அன்று ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் உணவு அருந்துவது போசலபாவாவின் செயலாக இருந்தது. இப்பொழுது அவர் வறுமை அடைந்திருந்தமையால் முன் போல அச்செயலைச் செய்ய முடியவில்லையே என்று தம் குடும்பத்தாரிடம் வருத்தத்துடன் கூறினார். அப்பொழுது மகன் கூறியதாவது: "தந்தையே, நம் செல்வத்தைப் பகவானின் மக்களுக்கு உதவிபுரியும் வகையில் சத்காரியத்தில் செலவழித்தோம். வறுமை அடைந்ததை முன்னிட்டுத் தான தர்மம் செய்யும் செயலை நிறுத்திவிடலாமா? பணம் இருந்த

பொழுது ஆயிரம் பேர்களுக்கு அன்னதானம் செய்தோம். அன்று அப்படிச் செய்ததும் வறுமையுற்றிருக்கும் இன்றைய நிலையில் ஒரு வருக்குச் சாதம் போடுதலும் ஒன்றேயாம். இதைத் தேவரீர் அறியாததன்று. ஆகையால் நாம் காட்டுக்குச் செல்வோம். நம்மால் முடிந்த அளவுவிறகைவெட்டிக்கொண்டு வந்து விற்றுப் பணம் பெறுவோம். அப்பணத்தைக்கொண்டு தசமியன்று குடும்பத்தார் அனைவரும் பண்ட ரிக்குச் செல்வோம். நம்மால் முடிந்தவரை அன்னதானம் செய்வோம். பகவானும் ப்ரீதி அடைவார்! இதைக் கேட்ட தந்தை போசல பாவா ஆறுதல் அடைந்து மகனுடன் காட் டுக்கு விறகு வெட்டச் சென்றார். ஆனால் அன்று வெட்டிக்கொண்டு வந்த விறகு வழக்கம்போல் விலைக்குப் போகவில்லை. தந்தை சற்று மன வேதனைப் பட்டார். "தந்தையே! கவலைப் படாதீர்கள். பகவான் நம்மைக் கைவிடமாட் டார். நாளைதான் தசமி. எனவே நாளையும் காட்டுக்குச் சென்று விறகு வெட்டிக்கொண்டு வந்து விற்போம். செலவிற்குப் போதிய பணம் வந்தால் அனைவரும் பண்டரிக்குப் போவோம். பணம் போதிய அளவு கிடைக்கா விட்டால் குடும்பத்தின் சார்பாகத் தாங்கள் ஒருவர் மட்டும் பண்டரிக்குச் சென்று விரதத் தைப் பூர்த்திசெய்துவிட்டு வரலாம்" என்று மகன் கூறியதைக் கேட்ட தந்தை அங்ஙனமே செய்யச் சம்மதித்தார். அன்றும் விறகு சரி யான விலைக்குப் போகவில்லை. எனவே போசலபாவாமட்டும் பண்டரிபுரம் சென்றார். கையிலிருந்த பணத்துக்கு ஏற்ப பூஜை சாமான் களைப் பெற்றுப் பகவானுக்கு வந்தனை வழி பாடு செய்தார். பக்தர்களுடைய பஜனையில் கலந்து கொண்டார். அடுத்தநாள் துவாதசி யன்று நதியில் நீராடி கையிலிருந்த சிறிய தொகைக்குச் சோளமாவு வாங்கி அதைப் பகவானுக்கு நைவேத்தியமாகப் படைத்துப் பிறகு அதிதியை எதிர்ப்பார்த்துக் கொண்டி ருந்தார்.

சந்திரபாவா நதிக்கரையில் செல்வந்தர்கள் சீரும் சிறப்புமாக விமரிசையான முறையில் அன்னதானம் செய்து கொண்டிருப்பதைப் போசலபாவா பார்த்தார். போசலபாவா வுக்குப் பழைய நினைவுகள் வரவே அவர் துக்கம் அடைந்து கண்ணீர் வடித்தார். தாம் உணவு அருந்துவதற்கு முன்பு அதிதிக்காகக் காத்துக் கொண்டிருந்தார். "பாண்டுரங்கா, ஏழை பங்காளா, ஓர் அதிதியை என்னிடம் அனுப்பிவைக்கலாகாதா? என்னிடம் சோள மாவுதான் உள்ளது. பெரிய விருந்து நடக்கும் இடத்துக்கு அவர்கள் செல்வார்களா? சோள மாவு உண்பதற்கு அதிதி வருவார்களா? பகவானே! நான் என்செய்வேன்? நீ என்னைக் காப்பாற்ற மாட்டாயா?" என்று போசலபாவா கண்ணீர் பெருக்கினர். அவருடைய உருகிய பிரார்த்தனையைப் பகவான் கேட்டு ஒரு கிழ வேதியனாக வடிவெடுத்து இறைவனுடைய திருநாமத்தை ஓதிக்கொண்டு தள்ளாடிக் கொண்டே போசலபாவா பக்கத்தில் வந்தார். "அப்பா, நீதானா போசலபாவா என்பவன்; நீ உத்தமன்; நீ பரமபக்தன். துவாதசி தோறும் அன்னதானம் செய்தாய். அதை நான் உண்டு மகிழ்ந்தேன். இன்று ஏன் நிறுத்தி விட்டாய்? வறுமை உனக்கு வந்துவிட்டதோ? இன்று உன்கையால் அதிதிகளுக்கு உணவு இட்டால் எவ்வளவு புண்ணியமாக இருக்கும்? நதிக்கரையில் அன்ன தானம் ஏராளமாக நடந்துகொண்டிருப்பதைப் பார். நீ ஏன் கண் ணீர்விட்டுக் கொண்டிருக்கிறாய்? உன்சக்திக்கு ஏற்றவாறு ஓர் இரு அகதிகளுக்கு நீ அன்ன மிடலாமல்லவா? அப்பா, புண்ணியவானே! எனக்கு நித்திய ஏகாதசிதான். ஒருநாளாவது நான் பசிதீர அருந்தியதில்லை. ஒரு கவளம் கிட்டுமோ! கிடைக்காதோ! பகவத் சங்கல்பம் எவ்விதமோ? என்னைப் போன்ற கந்தைத்துணி உடுத்தி இருப்பவர்களுக்கும், தரித்திரர்களுக் கும் அன்னம் இடுபவர்கள் யார்? நீயாவது எனக்கு ஒருகவளம் அன்னம் தரமாட்டாயா?" என்று அம்முதியவர் கேட்டார்.

போசலபாவா அம்முதியவரைக் கண்டதும் பரமானந்தம் அடைந்தார். அவர் வார்த்தை களைக்கேட்டதும் போசலபாவாவுக்கு ஆனந் தம் அதிகரித்தது. "சுவாமி, என்னிடம் சோள மாவு தான் இருக்கிறது. உப்புக்கூட இல்லாத இந்தச் சோளமாவைத் தாங்கள் ஏற்று என் னைக் கிருதார்த்தன் ஆக்குவீர்களாக" என்று போசலபாவா வேண்டிக்கொண்டார். பக வான் மகிழ்ச்சி அடைந்து போசலா நீ கொடுக்

கும் சோளமாவு எனக்குப் பிரீதியை உண்டு பண்ணும். பசி உள்ளவனுக்கு உப்பில்லாப் பண்டமும் தேவாமிர்தமாக இருக்கும். பசி இல்லாதவனுக்கு அறுசுவை உணவும் சுவைக்காது. உள்ளம் குளிர்ந்து முகம் மலர்ந்து உப்பில்லாக் கூழ் இட்டாலும் அது உண்பதற்கு அமிர்தமாக இருக்கும். முக்கனியுடன் உள்ளத்தில் உவகை இல்லாது முகங்கடுத்து இடுபவர்களுடைய உணவை உண்பவர்க்கு மேலும் பசிதான் உண்டாகும். எனவே உம்மிடமுள்ள சோளமாவை உள்ளம் உவகையோடு அளிப்பாயாக!' என்றார். போசலபாவா பரமானந்தம் அடைந்து தம்மிடமிருந்த சோளமாவைப்பகவானின் அக்ஷய பாத்திரத்தில் கொட்டினர். பகவான் சந்தோஷமாக அதைப் பெற்று மகிழ்ச்சி அடைந்தார். ருக்மணிதேவியும் கிழவி வடிவத்தில் அங்கு வரப் பகவானும் பிராட்டியாரும் சேர்ந்து போசலபாவா தந்த சோளமாவை ரொட்டியாகத் தயாரித்து உண்டார்கள்.

ருக்மணிதேவி வயிறார உண்டபின், "பக்தா! நீ பசியுடன் இருக்கின்றாய். நீ அதிதி சத்காரம் செய்துள்ளாய். நாங்கள் தரும் இந்த ரொட்டியைப் புசித்து உன் பக்தியை மேலும் வளர்த்துக் கொள்வாயாக" என்று அருள் புரிந்தாள். பகவானும், "குழந்தாய் நீ எங்கள் பசியைத் தீர்த்துள்ளாய். நீ கொடுத்த ரொட்டியால் எனக்கு இன்னும் பல நாட்கள் பசி உண்டாகாது. ஏழை எளியவர்களை ஆதரிக்கும் நல்லெண்ணமுடையவனாக நீ இருக்கின்றாய். இந்த நற்குணம் போதும். நீ வேள்வி செய்ய வேண்டியதில்லை, தவம்செய்யவேண்டியதில்லை, தரித்திரர்களின் வடிவங்களில் திரியும் பகவானுக்கு நீ செய்கின்ற தொண்டு பகவானை மகிழச் செய்யும். பகவானின் தரிசனத்தை நீ சீக்கிரம் பெறப் போகின்றாய்" என்று அருளினர். ருக்மணிதேவி போசலபாவிடம் ரொட்டியைக் கொடுத்து நீயும் உன் குடும்பத்தினரும் இதை உண்டு பசியைப் போக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினர். ருக்மணி தேவியிடம் இருந்துபோசலபாவா ரொட்டியை வாங்கினர். போசலபாவின் கைக்கு வந்ததும் அது இருபது ரொட்டிக்குமேல் ஆகிவிட்டது. போசலபாவா அப்பொழுது இது பாண்டு ரங்கனின் திருவிளையாடலாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணினர். அந்த ரொட்டியைச் சாப்பிட்டுப் பார்த்தார். அதன் சுவை சொல்லமுடியாததாக இருந்தது. கிழவி வடிவத்தில் இருக்கும் இவ் அம்மையும், கிழவன் வடிவத்தில் இருக்கும் இவ் ஆடவரும் சாதாரண மனிதர்கள் அல்லர். இவர்களை நாம் விட்டுவிடக் கூடாது என்று எண்ணியவராய் அவர்களுக்கு வணக்கம் செலுத்த அவர்கள் பக்கம் திரும்பினர். அவர்களை அங்குக் காணவில்லை. பகவானும் தேவியும்தான் இப்பொழுது வந்து நம்மிடம் உப்பில்லாச் சோளமாவை உண்டு போயிருக்கிறார்கள் என்று தீர்மானித்தார். பகவானுடைய காட்சிக்காக உருகித் துதிசெய்தார். அவருடைய பிரார்த்தனைக்கு இரங்கி பண்டரிநாதனும் அவருக்குத் தரிசனம் தந்து அருளினர்.

பகவான் உண்ட மீதி பிரசாதமாகக் கிடைத்த பாக்கியத்தை எண்ணி போசலபாவா பெருமகிழ்ச்சி அடைந்தார். "இறைவா, அடியேன் தந்த உப்பில்லா ரொட்டியை மிகவும் புகழ்ந்ததோடு மட்டுமன்றி அதை உண்டும் மகிழ்ந்தீர்கள். தேவியாரும் அதை உண்டார்கள். நீங்கள் உண்டதுபோக மீதியுள்ள ரொட்டியை நான் உண்டபோது அதன் சுவை எத்தகையது என்பதை உணர முடியாதவனாக இருந்தேன். உமது அடியார்கள் உமக்குத் தரும் உபயோகமற்ற பொருள்களும் உமது அருளால் எத்தகைய மேன்மை அடைகின்றன என்பதை இப்பொழுது நான்அறிந்து கொண்டேன். தாங்களும் ருக்மணிதேவியும் ஸ்பரிசித்ததை உண்பதற்குரிய பேறும், உங்கள் இருவரைத் தரிசித்த பேறும் கிடைத்தபின் அடியேனுக்கு வேறு என்ன வேண்டி இருக்கிறது? உங்கள் அருள் என்மாட்டுக் குறையாமல் இருக்கவேண்டும் என்பதை நான் மேலும் மேலும் பிரார்த்தித்துக்கொள்கிறேன்." இங்ஙனம் போசலபாவா பகவானைக் குறித்து உருகிப் பிரார்த்தனை செய்தார். உண்மையான பக்தர்கள் இறைவனிடத்தில் பக்தியைத் தவிர வேறு ஒன்றையும் வேண்டுவதில்லை. உண்மையான பக்தியின் மூலம் ஏற்படுகின்ற பேரின்பத்தை அனுபவித்தவர்களுக்கு உலகியல் இன்பம் பொருளற்றதாகப் போய்விடுகிறது. (தொடரும்)

கவிதைகள் புகட்டும் தத்துவங்கள்

(பத்தாம் வகுப்பு ஆங்கிலப் பாடப்பகுதியில் உள்ள கவிதைகளின் கருத்து விளக்கம்)

[201 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புதியவன்

யூதர்களுக்கு ஆப்ரஹாம் என்னும் பெரும் தலைவர் இருந்தார். அவருடைய கூடாரத்துக்கு வயதான மனிதன் ஒருவன் இரவில் வெகுநேரம் கழித்து வந்தான். அவனுடைய நிலையும் இயற்கைச் சூழ்நிலையும் பரிதாபகரமாக இருந்தன. புறவுலகம் இருள் சூழ்ந்து இருந்தது. புல்லைக்கூடக் காண முடியாது வெற்றுத் தரையாக நிலம் இருந்தது. வந்த புதிய மனிதனுக்குப் பசி வாட்டியது. அவன் வயிற்றுக்கு உணவு கேட்டான். உடலில் பலம் இல்லை. அவனுடைய கண்பார்வை இரக்கம் காட்ட வேண்டுமென்று புலப்படுத்துவது போன்று இருந்தது. தன்னைக் காப்பாற்றுபவர் ஒருவரும் இல்லையா? என்று கேட்பது போன்று அவன் கண்பார்வை இருந்தது. அவனுடைய நிலையைக் கண்டு ஆப்ரஹாம் இரக்கப்பட்டார். அவன் முன்னிலையில் உணவைக் கொண்டு வந்து வைத்தார். கண்பார்வையில் நன்றி தெரிவித்தவனாக அவன் உணவை உண்பதற்கு அமர்ந்தான். ஆனால் உயிர்களுக்கு எல்லாம் உணவு அளித்துவரும் இறைவனைப் புகழ்ந்து ஒருவார்த்தையும் அவன் பேசவில்லை. இறைவனுக்கு வணக்கமும் செலுத்தவில்லை. கூடாரத்துக்கு வெளியே இருளும், குளிரும் வருத்தக் கூடாரத்துக்குள்ளே அவனுக்கு நல்ல பாதுகாப்பு இருந்தது. மேஜைமேல் பலவகை உணவு பதார்த்தங்கள் வைக்கப்பட்டிருந்தன. அரசாங்க விருந்து போல் அது இருந்தது.

உணவை எடுப்பதற்கு அப்புதியவன் கையை நீட்டினான். அவனுடைய கை உணவைத் தொடுவதற்கு முன்பு ஆப்ரஹாம் எழுந்தார். புதியவரே! என்று கூறியவாறு தமது கைத்தடியின் மீது சாய்ந்துகொண்டு "கடவுளுக்கு வணக்கம் செலுத்தி நீ பிரார்த்தனை செய்வதில்லையா? உம்மிடம் தெய்வ பக்தி சிறிதும் இல்லையே. கடவுளை வழிபடும் பழக்கம் உமக்கு இல்லையா?" என்ற கேள்விகளைக் கேட்டார். அப்புதியவன் "அவற்றையெல்லாம் நான் ஒன்றும் அறியேன்" என்று பதில் விடுத்தான். ஆப்ரஹாம் வருத்தத்துடன் கூறியதாவது: "உன் மீது எனக்கு இரக்கம் உண்டு. ஆனால் நான் அளித்த உணவை நீ உண்ணலாகாது. நீ வெளியே போகலாம்."

இங்ஙனம் கூறி ஆப்ரஹாம் அப் புதியவனை வெளியே அனுப்பிய பின் அவருடைய கூடாரத்துக்கு மற்றொருவர் வந்தார். புறவுலகம் இருள்மூடி பயங்கரமாக இருந்தது. காற்றுப் பயங்கரமாக வீசியது. கூடாரத்துக்கு வெளியே இத்தகைய நிலைமை இருக்கக் கூடாரத்துக்குள்ளே பேரொளி நிறைந்திருந்தது. ஒளி ஏற்பட்டதும் ஆப்ரஹாம் கடவுள் தம் அருகில் வந்து விட்டார் என்பதை அறிந்தார். "அந்த வயதான மனிதன் எங்கே? புகலிடம் கேட்டு உள்ளே வந்த அம்மனிதனை வெளியே அனுப்ப உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?" என்று தெய்வம் ஆப்ரஹாமைக் கேட்டார்.

இறைவன் இந்தக் கேள்வியைக் கேட்டதும் நடுக்கம் ஆப்ரஹாமுக்கு ஏற்பட்டு விட்டது. தலை குனிந்தது; கண் தரையைப் பார்த்தது. "இறைவா! அப்புதியவனை இரவு என்னோடு தங்கலாம் என்றுதான் கூறினேன். ஆனால் அவன் உம்மை வழிபடவில்லை. அச்செயலை என்னால் தாங்க முடியவில்லை. ஆகையால் அவனை வெளியேற்றும்படி நேரிட்டது" என்று கூறினார். அவன் செயலை எவ்வளவு காலமாக நான் பொறுத்துக் கொண்டிருக்கின்றேன். இன்னும் நான் அவனுக்காகக் காத்திருப்பேன். ஓர் இரவு உன் கூடாரத்தில் அவனுக்குப் புகலிடம் தருவதற்கு உன்னால் முடியாது போயிற்று?" என்று இறைவன் ஆப்ரஹாமைக் கேட்டார்.

தம்மை நினையாதவன், தம்மைப் புகழாதவன் என்று இறைவன் ஒருவனை ஒதுக்கித் தள்ளுவதில்லை. தாயினும் சாலப்பரிந்து உயிர்களின் உள்ளத்தில் உள்ளொளியைப் பெருக்கி வருவது இறைவனுடைய அருளாம். இச்செயலைத் தம் அடியார்களும் செய்ய வேண்டுமென்பதை ஆப்ரஹாமுக்கு அன்று இறைவன் புகட்டினார்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (466) தர்மசக்கர அட்டையில் வெளியிடப்பட்டுள்ள நடனமாடும் விநாயகரை வீட்டில் வைத்து வணங்கினுல் தீங்கு நேரும் என்கின்றனர். இது உண்மையா?

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. வாழ்க்கை சம்பந்தமான பலப்பல கோட்பாடுகளையும், கொள்கைகளையும் அவரவர் தமக்குத் தோன்றியபடியெல்லாம் பகருகின்றனர். அக்கூற்றுகளைக் கேட்டு மனம் குழம்பியிருப்பவர்கள் அதிலும் அதிகமாம். ஆத்ம சாதகன் ஒருவனுக்கு இத்தகைய ஐயப்பாடு உதவாது. அவன் திண்ணியனுயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறுன். இக்கொள்கையைத்தான் பாலனுயிருந்தது முதற்கொண்டு விவேகானந்த சுவாமிகள் எடுத்துப் புகட்டியுள்ளார்.

வீட்டில் வழிபடு தெய்வம் ஆனந்த மூர்த்தியாயிருப்பது முற்றிலும் மங்களமானதேயாம். ஆதலால் ஆனந்தத் தாண்டவமாடும் கணபதியைப் பக்தி பூர்வமாக வீட்டில் வைத்து நன்கு உபாசனை செய்வது முற்றிலும் பொருத்தமானதேயாம். வீட்டில் கேடு ஏதேனும் வந்தால் அதற்கு முகாமையாயிருப்பது ஆனந்தத்தாண்டவமாடும் கணபதி அன்று; வேறு ஏதாவது காரணம் இருக்கலாம். அக்காரணம் ஒருவருக்கு அமைந்தபடியே மற்றவருக்கும் அமையாது என்பது திண்ணம்.

கடவுளை எந்த வடிவத்தில் வைத்துப் பூஜித்தாலும் நம்முடைய வழிபாட்டை அவர் ஏற்றுக் கொள்கிறுர். தெய்வத்தை எவ்வடிவத்தில் வைத்து வழிபடுகிறேம் என்பது முக்கியமானது அன்று. நாம் வைத்துக்கொள்ளும் தெய்வ வடிவத்தில் நாம் செலுத்துகின்ற அன்பே முக்கியமானது. எனவே மனதில் உலகப்பற்று நீங்கித் தெய்வப்பற்று ஓங்குவதற்குத் தெய்வத்தின் வடிவத்தை நாம் துணையாகக்கொள்கின்றேம். நம் மனதுக்குப் பிடித்தமான தெய்வத்தின் வடிவத்தை வீட்டில் வைத்து வழிபடுவதனுல் நமக்குத் தீங்கு ஒன்றும் வாராது. மனப்பூர்வமாக வழிபாடு நிகழ்ந்தால் பக்தி ஓங்கி வரும்.

கேள்வி: (467) Who is an Ideal teacher? ஒரு லட்சிய ஆசிரியர் யார்?

ஆசிரியராயிருப்பது மிகக் கடினம். ஏனென்றுல் ஒவ்வொரு படித்தரத்திலும் ஆசிரியனுடைய சொல்லையும் செயலையும் பார்த்து மாணக்கன் பாடம் கற்கின்றுன். நல் ஆசிரியன் ஒருவனிடம் பண்புகளனைத்தும் ஒருங்கே அமையப்பெறுவது முற்றிலும் அவசியம். தாயின் அன்பும், தந்தையின் கட்டுப்பாடும், ஆசிரியரிடம் இருக்க வேண்டிய ஒழுங்குப்பாடும் ஒன்று சேர்ந்து அமைந்திருப்பது நல்லாசிரியர் ஒருவரிடம் இருக்கவேண்டிய பண்பாம்.

ஆசிரியர் புகட்டுவதோடு நின்றுவிடலாகாது. தம் வாழ்க்கையின் மூலம் நற்பண்புகளை வாழ்ந்து காட்டுபவரே நல்லாசிரியராக விளங்க முடியும். நல்லாசிரியர் ஒருவர் தம் வாழ்க்கையின் மூலம் நல்வாழ்வைப் பிறருக்குப் புகட்டிக்கொண்டே இருக்கவேண்டும். சாந்தம், அமைதி, அடக்கம், சான்றுண்மை ஆகிய நற்பண்புகளை நல்லாசிரியர் பெற்றிருக்கவேண்டும். இத்தகைய நற்பண்புகளை நல்லாசிரியர் ஒருவரிடமிருந்துதான் கற்றுக்கொள்ள முடியும். புத்தகங்களின் மூலமாக அப்பண்புகளைக் கற்றுக்கொள்ள முடியாது.

கேள்வி: (468) முக்குணங்களும் தெய்வ சொரூபமா?

சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களாலாகியது இவ்வுலகம். இறைவன் தாமே உலகாக இலங்குகின்றுர். ஆதிபகவன் முதற்றே உலகு என்பது மறைமொழி. மூன்று குணங்களுள் தமோகுணமயமாயிருப்பது பெரிதும் ஜடப்பொருள். நடமாட்டமயமாயிருப்பது ரஜோகுணம். அறிவு மயமாகவும் மேலாம் பிறப்பிலும் இருப்பவை சத்துவகுணம் நிறைந்தவைகளாம்.

மூன்று குணங்களுள் கடைத்தரத்தில் இருப்பது தமோகுணம். இடைத்தரத்தில் இருப்பது ரஜோ குணம். தலைத்தரத்தில் இருப்பது சத்வகுணம். கீழான குணம் மேலான குணமாகப் பரிணமிப்பது இயற்கையின் திட்டமாம். ஆகையால் குணங்கள் மூன்றும் ஒன்றேடொன்று சம்பந்தப்பட்டவைகள்.

கேள்வி: (469) இக்கலியுகத்தில் ஈசனுடன் நேராகப் பேசமுடியுமா?

கலியுகம் என்பது கேடுகள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமாம். இது புராண வரலாறு. மற்று தத்துவ பூர்வமாக ஆராயுமிடத்துக் கலியுகம், துவாபரயுகம், திரேதாயுகம், சத்தியயுகம் அல்லது கிருதயுகம் ஆகிய நான்கும் அவரவர் மனப்பண்பாட்டின் விளைவாம். இக்கலியுகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர் வாழ்ந்து வந்தது கிருதயுகம். அவர் அம்பிகையுடன் பேசிய பேச்சுக்களே பல நூல்களாக வடிவெடுத்து உள்ளன. நம் போன்ற சாதாரண மனிதர்கள் பரமஹம்சதேவர் படைத்திருந்த தகைமையைப் படையாதிருந்த போதிலும் அவர் அம்பிகையின் அருளைப் பெறுதற்கு அம்பிகையோடு கொண்டிருந்த இணக்கத்தை நாம் நன்கு கடைப்பிடிக்கலாம். அத்துடன் அம்பிகையுடன் அவர் கொண்டிருந்த இணக்கத்தை நாம் பின்பற்றலாம். இத்தகைய சன்மார்க்கங்களை ஊக்கத்துடனும் உள்ளன்போடும் கடைப்பிடிக்கின்றவர்கள் பாக்யவான்களேயாம்.

கேள்வி: (470) கோயில்களில் நவக்ரஹங்கள் இருப்பதன் தத்துவம் என்ன?

கோயில் ஒன்று பிரபஞ்ச அமைப்புக்கு முன் மாதிரியாக அமைந்திருக்கிறது. இனி ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது ஆகிய நவக்கிரஹங்கள் பிரபஞ்சத்தில் இடம் பெறுகின்றன. அதை முன்னிட்டுத்தான் கோயிலினுள் நவக்ரஹங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஆனல் ஞானமார்க்கம், பக்திமார்க்கம் ஆகிய சன்மார்க்கங்களைக் கடைப்பிடிப்பவர்களுக்கு இந்த நவக்கிரகங்களில் கருத்தைச் செலுத்த வேண்டிய அவசியமில்லை. அவர்கள் யாண்டும் ஈசனுடைய அருளைச் சார்ந்திருக்கிறார்கள். மற்றுக் கர்ம காண்டத்தில் செல்லுகிறவர்கள் நவக்கிரகங்களைச் சார்ந்திருந்து அவைகளால் உண்டாகின்ற பலன்களில் நல்லவைகளை நாடுதலிலும், கெட்டவைகளைத் தவிர்த்தலிலும் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். ஆக தேவை ஏற்படுகின்றவர்கள் கோயில்களில் அமைந்துள்ள நவக்கிரகங்களை வேண்டியவாறு பயன்படுத்திக்கொள்ளட்டும். ஆனல் ஈசனுடைய அருளைச் சார்ந்திருக்கின்றவர்கள் நவக்கிரகங்களைப் பயன்படுத்த மாட்டார்கள்.

வினைப்பயனை விரும்புபவர்கள் புண்ணிய பாபத்துக்கு உட்படுகிறார்கள். தாங்கள் செய்த தீவினையின் பயனை அனுபவிக்க நேரிடும் பொழுது அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு நவக்கிரகங்களின் அனுக்கிரகத்தை நாடுகிறார்கள். அத்தகையவர்கள் வழிபடுவதற்கு நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. வினைப்பயனில் பற்று வைக்காதவர்களுக்குப் புண்ணியமும் இல்லை; பாபமும் இல்லை. அவர்கள் பிரபஞ்ச வாழ்க்கையிலிருந்து விடுபடுவதற்கு ஈசனுடைய அருளைச் சார்ந்திருக்கிறார்கள். ஈசனிடமிருந்து அவர்கள் ஞானமும் பக்தியும் வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள். ஞானத்தையும், பக்தியையும் நாடிப் போகின்றவர்கள் நவக்கிரக உபாசனை செய்வதில்லை.

கேள்வி: (471) விஷ்ணுதான் நம் வாழ்வின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பவர் என்றால் விஷ்ணுவை வணங்காத சிவ பக்தர்களுக்கு அவர்களின் ஆசைகளை நிறைவேற்றி வைக்க மாட்டாரா?

ஹரியும் சிவனும் ஒன்று, அறியாதவன் வாயில் மண்ணு. என்பது சர்வ சாதாரணமாய் மக்களிடையில் அமைந்துள்ள கோட்பாடாம். இனி, பரமசிவன் பார்வதியோடு கூடி அர்த்த நாரீஸ்வரனாக இலங்குகின்றார். ஆகவே விஷ்ணுவும், சிவமும், சக்தியும் பொருள் ஒன்றேயாம். அதனதன் செயலுக்கேற்றவாறு நாமங்கள் மூன்றாக அமைந்துள்ளன. பக்தன் ஒருவனுக்கு இவைகளைப் பாகுபடுத்துதற்கு நேரமில்லை. குழந்தை ஒன்று தான் வேண்டுவதைத் தாயிடம் அழுது பெறுகிறது. மற்றுத் தாய்க்கும் தந்தைக்குமுள்ள இணக்கத்தை ஆராய்ச்சி செய்யாததனால் குழந்தைகளுக்கு நஷ்டம் ஏதுமில்லை. பக்தன் ஒருவன் விஷ்ணு என்றும், சிவன் என்றும், சக்தி என்றும் வீண் ஆராய்ச்சியில் பொழுது போக்கமாட்டான். குழந்தை ஒன்று தாயைக் குறித்து அழுது தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வது போன்று பக்தன் ஒருவன் பரம்பொருளிடத்துத் தூய பக்தி பூண்டு ஒழுகி மெய்ப்பொருளின் அருளைப் பெற முயல்வானாக.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

மூன்றாவது ஸ்கந்தம் அத்தியாயம் 1.

சுகதேவர் சொன்னார்:-விதுரர் சகலசௌபாக்கியங்களும் நிறைந்த அரண்மனை வாழ்வை விட்டு வனம் ஏகினார். அங்குப் பெருமை மிக்க மைத்ரேய ரிஷியைச் சந்தித்தார். இதே கேள்வியைத்தான் விதுரரும் கேட்டார். உன்னுடைய முன்னோர்களான பாண்டவர்களுக்காக இப்பிரபஞ்சத்தின் நாதனாகிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கௌரவர்களிடம் தூது போனார். அப்போது ஹஸ்தினாபுரத்தில் துரியோதனனின் உபசரிப்பைப் பகவான் நிராகரித்து விட்டு விதுரனின் வீட்டில் தங்கினார். பகவானும் பக்தனும் ஒன்று. ஏனென்றால் பக்தன் உள்ளத்தில் பகவானைத் தவிர வேறு எண்ணமே இல்லை. இது என் வீடு, இன்னார் வீடு என்று எல்லார் வீட்டிலும் அகங்கார மமகார முத்திரை, காற்று நிறைந்திருந்தது. விதுரனோ, யான் எனது அற்றவர், சதாபகவத் சிந்தனையில் இருப்பவர், 'ஆண்டவனே இது உம் வீடு' என்றார். ஆண்டவன் அங்கு விரும்பி வாசம் செய்தார். யோகி ஹிருந் நிவாசாய என்று ஆண்டவனுக்குப் பெயர். யோகியின் ஹிருதயத்தில் வாசம் செய்பவர் என்பது பொருள். ஆண்டவன், "இது என் வீடு" என்று சொன்ன பெருமை வாய்ந்தது விதுரனின் வீடு.

பரீக்ஷித் கேட்டார்:- தேவே, விதுரர் எங்கு, எப்படி பகவான் மைத்ரேயரைச் சந்தித்தார். அவ்விரு விப்ரர்களும் என்ன பேசினார்கள்? இருவரும் மிகவும் மேலானவர்கள்; பண்பாளர்கள். அவர்களின் சம்பாஷணை பகவத் விஷயம், உயர்ந்த தத்துவ விளக்கமாக இருக்கும். அதைத் தேவரீர் அன்புடன் சொல்லுவீராக.

சூதர் சொன்னது:- பரீக்ஷித்தின் ஆர்வமான ஆழமான இக்கேள்வியைக் கேட்டுச் சுகதேவர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அவர் சர்வக்ஞன். மகிழ்ந்த உள்ளத்துடன் முக மலர்ச்சியுடன் விடை பகர்ந்தார்

ஸ்ரீ சுகதேவர் சொன்னது: அன்பான அரசனே கவனமாய்க் கேள். திருதராஷ்டிரன் புறக்கண்களை இழந்தவன் மட்டுமன்று. ஆசையினால், தன் மக்களிடத்தில் வைத்த அதிகமான அபிமானத்தால் அவன் அகக் கண்களும் குருடாகிவிட்டன என்பதைக் குழந்தாய் நீ அறிவாய். அவன் தம்பி பாண்டு காலமாகி விட்டான். தந்தையை இழந்து நின்ற தன் தம்பியின் புதல்வர்களை (பாண்டவர்களை) உதாசீனப்படுத்தித் தன் பொல்லாத மகனின் பஞ்சமகாபாதகங்களையும், அழிவுச் செயல்களையும் நேர்மையற்ற அக்குருடன் அங்கீகரித்தான். திட்டமிட்டுப் பாண்டவர்களையும் அவர்களின் தாயாரையும் அரக்கு மாளிகையில் வாசம்பண்ணவைத்துத்தருணம் பார்த்து அதை எரித்தார்கள். அதுமட்டுமா, பெரிய ராஜ சபை நடுவே, தன் சொந்த மருமகள் திரௌபதியை, யுதிஷ்டிரனின் உத்தம பத்தினியைக் கண்ணீர்விட்டுக் கதறக் கதற மகன் துச்சாசனன் கூந்தலைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்த அக்கொடிய செயலை அக்குருடன் தடுத்து நிறுத்தவில்லை. தூய்மையே வடிவெடுத்த, கள்ளம் கபடமற்ற, தர்மாத்மாவான, அஜாதசத்ருவான யுதிஷ்டிரனைக் கபடமாகச் சூதாட்டத்துக்கு இழுத்து நய வஞ்சகமாக ராஜ்யத்தைப் பணயமாக வைக்கச் செய்து பறித்துக்கொண்டார்கள். ஒப்பந்தப் படி பாண்டவர்கள் வனவாசமும், அக்ஞாத வாசமும் முடித்து வந்து நியாயமான தங்கள் ராஜ்யத்தைக் கேட்டபோது பேராசையினால் குருடனாகிவிட்ட துரியோதனன் ராஜ்யத்தையும் அதன் சிறு பகுதியையும் தர மறுத்து விட்டான். இந்த ஜகத்துக்கெல்லாம் நாதனாகிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் உத்தமமான யுதிஷ்டிரனால் அனுப்பப்பட்டு அன்புக்குக் கட்டுப்பட்டவராக ஹஸ்தினாபுரத்திற்குத் தூதுவனாக வந்தார். அவர் கௌரவர்கள் சபையில் பேசிய பேச்செல்லாம் நல்லோராகிய பீஷ்மருக்கும் மற்றும் சிலருக்கும் அமுதமொழியாக இருந்தன. ஆனால் துரியோதனனோ அவ் வார்த்தைகளை மதிக்கவில்லை. அவனது நல்வினைப்பயன்கள், புண்ணியப் பலன்கள் எல்லாம் தீர்ந்துவிட்டன. அவனது அழிவுகாலம், தீவினைப் பயன்களை அனுபவிக்க வேண்டிய

காலம் அடுத்துவந்துவிட்டது. இந்த நேரத்தில் குருடனுகிய திருதராஷ்டிரன் தன் இளைய சகோதரனுகிய விதுரனை ஆலோசனைக்கு அழைத்தான். விதுரன் பின் அண்ணனின் இருப்பிடத்திற்குச் சென்று தனிமையில் தன் கருத்தைச் சொன்னுர். ராஜதந்திரிகள், ராஜ நிபுணர்கள் இன்றும்கூட விதுர நீதி என்று அவ்வாலோசனையைப் பாராட்டுகிறுர்கள். ராஜ தந்திரிகளுள் விதுரரைச் சூடாமணி என லாம். பண்பிலும், விவேக வைராக்கியத்திலும் மிக மேலானவர் விதுரர்.

விதுரர் சொன்னதாவது :— யாரிடத்தும் விரோதம் பாராட்ட முடியாத குணக்குன்ருகிய யுதிஷ்டிரனின் பங்கை அவனுக்குத் திருப்பித் தந்து விடுவீராக. உன்னுல் செய்யப்பட்ட, யாராலும் பொறுக்க முடியாத, மன்னிக்க முடியாத தீமைகளை எல்லாம் யுதிஷ்டிரன் பொறுத்துக் கொண்டான். யாரைக் குறித்து நீ எப்போதும் பயந்து கொண்டிருக்கிருயோ அத்தகைய பீமனும் அவனது சகோதரர்களும் கோபத்தால் பதட்டம் கொண்டுள்ளார்கள். யாதவர்களால் தெய்வம் எனக் கொண்டாடப் படுபவரும், ஜீவர்களுக்கு முக்தியை, நற்கதியை நல்குபவரும் ஆகிய ஸ்ரீ கிருஷ்ணனுல் பாண்டவர்களின் பக்கம் உள்ள நியாயம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. என் பிரபு இப்பொழுது துவாரகையில் இருந்து வருகிருர். இப்பரத கண்டத்தில் உள்ள எல்லாப் பெரிய அரசர்களையும் அவர் வென்றவர். அவரை ஆண்டவனுக வணங்கும் பிராம்மணுேத்தமர்களும், தேவர்களும் கண்ணன் பாதம் பணிந்து நிற்கிருர்கள். தீமைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து துரியோதனன் வடிவெடுத்து உன் வீட்டில் புகுந்துள்ளது. அவனை நீ பிரிய மகனுகப் பாராட்டி வருகிருய். அவன் ஸ்ரீ கிருஷ்ண துவேஷி. நல்லவைகளை, நல்லவர்களை வெறுப்பவன். அவனுல் அன்ருே நீயும் என் பிரபு, பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் நல்லுரைகளை, நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனுல் உன் பெருமையை நீ இழந்து விட்டாய். உனது பரம்பரையினர், உன் சந்ததியர்கள் நலமாக வாழ வேண்டுமானுல், உன் மகன் துரியோதனனை உடனே துறப்பாயாக, பிரஷ்டம் பண்ணுவாயாக, ஒழித்துவிடுவாயாக.” விதுரர் பெரிய முனிவர்களாலும் மதிக்கத் தக்க குண நலனும், புத்தி தீக்ஷண்யமும், தோற்றப் பொலிவும் வாய்ந்தவர். அவருக்கு முன்பு யாரும் மரியாதை செய்யாமல் இருக்க முடியாது. அத்தகைய விதுரர் சொன்ன ஆலோசனையைக் கேட்டதும் துரியோதனன், துச்சாசனன், கர்ணன், சகுனி ஆகியோருக்கு அளவுகடந்த கோபம் உண்டாயிற்று. துரியோதனனின் உதடு துடித்தது. அவன் தன் சிறிய தகப்பனுர் ஆகிய விதுரரை இங்ஙனம் மிக்க கடும் சொற்களால் தூஷித்தான். “வேலைக்காரியின் தாதியின், புத்திரனுகிய இந்த இழி குலத்தவனை இங்கு அழைத்தது யார்? யாருடைய சோற்றை உண்டு கொழுத்திருக்கிருனே அந்த யஜமானனுகிய என்னிடத்துச் சத்ரு, விரோத பாவனையும் என்னுடைய சத்ருக்களிடத்துப் பக்ஷம் வைத்து அவர்கள் சார்பாகப்பேசுகிருன். ஆயினும் அவனை நான் உயிரோடு விடுகிறேன். ஆனுல் அவனைத் தேசப்பிரஷ்டம் பண்ணுகிறேன். உடனே அவன் என் தலைநகரத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும்.” இவ்வார்த்தைகள் விதுரரின் காதுகளில் நாராசம் எனப் பாய்ந்தன. தன் சொந்த சகோதரனுக்கு முன்னுல் சொல்லப்பட்ட, கக்கப்பட்ட இத்தீச்சொற்கள் அவரை மிகவும் வேதனைப்படுத்தின. ஆனுல் ஆண்டவனின் திருவிளையாடலை மாயா விநோதங்களை அறிந்தவரான விதுரருக்கு உடனே அமைதியும் ஏற்பட்டது. இவ்வுலகின் கோலம், வர்த்தமானம், பவிசு அவருக்குத் தெரியாதா? மனக்கிலேசம் ஏதுமின்றி உடனே தானே அரண்மனையை விட்டுத் தலைநகரைவிட்டு வெளியேறினுர். போகும்போது அரண்மனை வாயிலில் தன் வில்லை வைத்து விட்டுப் போனுர். குரு வம்சம் செய்த புண்ணிய வசத்தால் விதுரர் அந்தக் குலத்தில் வந்து தோன்றினுர். நல்ல சம்ஸ்காரங்களை வளர்த்தல் பொருட்டு, ஆத்மீக சம்பத்தைப் பெறுதல் பொருட்டு அவர் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டார். பெருமை மிக்க ஆண்டவனை எங்கெல்லாம் உணர்ந்து துதிக்கிருர்களோ ஆங்கெல்லாம் என் ஆண்டவன் விரும்பி வாசம் பண்ணுகிருன். இப்புண்ணிய பூமியில் அப்படிப்பட்ட ஸ்தலங்கள், க்ஷேத்திரங்கள் ஆயிரக்கணக்காக

உள்ளன அல்லவா. ஆங்கு என் ஆண்டவன் பக்தர்கள் விரும்பியவண்ணமெல்லாம் கோலம் கொண்டுள்ளான். தன்னந்தனியராய் அவர் கால்நடையாகவே புனித நகரங்கள், தபோ வனங்கள், ஆண்டவன் வாழும் கிரிகள், ரிஷி களின் ஆச்ரமங்கள், புண்ணிய நதிகள், புண் ணிய தீர்த்தங்கள், பரிசுத்த நீர் நிறைந்த மானஸ ஸரோவரங்கள் ஆகியவைகளுக்குப் போனார். ஆங்கெல்லாம் தெய்வ சான்னித் தியம் விசேஷமாக விளங்குகிறதல்லவா. அவர் இப்பாரத பூமியின் புண்ணிய ஸ்தலம் ஒன்று விடாது தரிசித்தார். எல்லாப் புண்ணிய தீர்த் தங்களிலும் நீராடினார். அவர் ஒரு பைத்தியம், நாடோடி போன்று சஞ்சரித்தார். மரங்களிலி ருந்து தானே விழுந்த கனிகளைச் சாப்பிட்டுக் கொண்டு தரையில் படுத்து உறங்கி எளிய வாழ்வு வாழ்ந்தார். ஆண்டவனை அடைய ஏற்படுத்தப்பட்ட எல்லா விரதங்களையும் அனுஷ்டித்தார். தம் உற்றார் உறவினர் கூட அவரை அடையாளம் கண்டு கொள்ள முடி யாதவாறு அவர் உருமாறி விட்டார். சஞ்சரித் துக்கொண்டே இருந்தார்.

விதுரர் இங்ஙனம் யாத்திரையாகச் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தபொழுது ஒரு சமயம் துவாரகைக்குப் பக்கம் உள்ள பிரபாஸா என் னும் இடத்துக்கு வந்து சேர்ந்தார். அப் பொழுது தர்மராஜா யுதிஷ்டிரர் ஸ்ரீ கிருஷ்ண சகாயத்தால் இப்புண்ணிய தேசத்தின் ஒப் பற்ற ஏக சக்கரவர்த்தியாக ஆனார். மூங்கில் காடு தீப்பற்றி சர்வநாசம் அடைவது போன்று கௌரவர்கள் அத்தனை பேரும் மாண்டுவிட்டார்கள்; மூங்கில் ஒன்றுக்கொன்று உராய்ந்து தீப்பற்றி நாசமடைந்ததுபோன்று தாயாதிப்பகையால் அழிந்து விட்டார்கள். இவ்விஷயங்களை விதுரர் தெரிந்து கொண் டார். இந்தப் பேரழிவைக்கண்டு மிகவும் மனம் வருந்தியவராய் அவர்மிகவும் அவசரமாய் சரஸ் வதி நதிக்கரையை வந்தடைந்தார். ஆங்கு அந்த நதி மேற்கு முகமாகப் பாய்கிறது. ஆங்குப் பதி னொருஇடங்கள், பல முனிவர்களின் ஞாபகார்த் தமாகப் புனிதமாகக் கருதப்படுபவைகளாக உள்ளன. திரித, உசனா (சுக்ராசாரியரின் தந் தையார்) அசித, சுயம்புவமனு, பிரிது என்கிற அரசன், அக்னிபகவான், வாயுபகவான், சுதா சன் என்கிற அரசன், பசுக்கள், குஹன் (சிவ குமாரன்) சிரத்ததேவன் என்கிற அரசன் (வைவஸ்வத மனு) ஆகிய உத்தமர்களின் ஞாபகார்த்தமாக அந்த இடங்கள் விளங்கு கின்றன. மேலும் பகவான் மஹாவிஷ்ணு ஆலயங்கள் பல ஆங்கு உள்ளன. அவைகள் மேலாம் முனிவர்களால் பிரதிஷ்டை செய்யப் பட்டவை. அவ் ஆலயங்களின் கோபுரங்களில் மஹாவிஷ்ணுவின் ஆயுதமாகிய சுதர்சன சக்க ரம் சின்னமாகப் பொறிக்கப்பட்டிருந்தது. அவைகள் கண்ணில்பட்டதுமே பக்தர்களுக்கு என் ஆண்டவனின் ஞாபகம் பொங்கி வரு கிறது. இந்த இடங்கள் எல்லாம் விதுரர் தம் யாத்திரையில் தங்கி ஆனந்தித்த இடங்கள் ஆகும். செல்வச் செழிப்புள்ள சௌராஷ்டிரம், சௌவீரம், மத்ஸ்யம், குருஜங்கலம் ஆகிய ராஜ்யங்களைக்கடந்து அவர் யமுனை நதிக் கரைக்கு வந்தார். அங்கு அவர் உத்தமமான ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களில் ஒருவரான உத்தவ ரைச் சந்தித்தார். விதுரர் உத்தவரை அன்பு டன் ஆலிங்கனம் செய்துகொண்டார். உத்தவர் தேவகுருவாகிய பிருஹஸ்பதியின் மாணாக்கர், பரிபூரணமான மன அமைதி உடையவர், அவ ரிடத்தில் விதுரர் தங்கள் அன்புடைய உற வினர்களான என் ஆண்டவன் பாதுகாப்பிலி ருக்கும் யாதவர்களின் க்ஷேமங்களை விசாரித் தார். ஸ்ரீமந் நாராயணனின் உந்திக்கமலத்தில் தோன்றிய பிரம்மதேவரின் பிரார்த்தனைக்கு இணங்கி அப்பள்ளிகொண்ட பரந்தாமன் ஸ்ரீ கிருஷ்ணனாகவும், பலராமனாகவும் இவ்வுல கில் வந்து அவதரித்தனர். பூபாரம் துடைத்து மக்களுக்குப் பெருமகிழ்ச்சியை,ஆனந்தத்தைத் தந்த அப்பரம புருஷர்கள் தம் பாட்டனாராகிய சூரசேனருடன் க்ஷேமமாக இருக்கிறார்களா? என் அன்பான உததவர் குருவம்சத்தின் பேரில் மிகுந்த அன்புடைய வாசுதேவர் நல மாக இருக்கிறாரா? அவர் தம் அன்பு சகோ தரி குந்திக்கு அளித்த அன்புப் பரிசுகளுக்கு அளவு உண்டா. அப்பரிசுப் பொருள்களைப் பார்த்துக் குருவம்சமே மகிழ்ந்து போயிற்று, திருப்தி அடைந்தது, அன்புக்கடன் பட்டுவிட் டது. என் அன்பு மிக்க தோழா, ருக்மணி யின் குமாரனும், என் ஆண்டவனின் அருள் பிரசாதமானவனும், அன்புக் கடவுளின் அவ

தாரமானவனும், சான்றோர்களின் ஆசியினால் தோன்றினவனும் யாதவர்களின் பிரதம சேனாபதியானவனும் ஆகிய மஹாவீரன் பிரத்யும்னன் க்ஷேமமாக உள்ளானா? விருஷ்ணிகள், போஜர்கள், தசார்ஹர்கள், சாத்வதர்கள் ஆகிய ராஜ குலங்களின் தலைவனாகிய உக்ர சேனர் நலமாக உள்ளாரா? தன் ராஜ்யத்தை இழந்து, கீர்கதியாய் இருந்தவரை, நம்பிக்கை எல்லாம் இழந்த நிலையில் என் பிரபு தாமரைக் கண்ணன் அவரை மதுராபுரிக்கு மீண்டும் அரசனாக்கினார் அன்றோ. ஸ்ரீ கிருஷ்ண குமாரனாகிய சாம்பன், பராக்கிரமத்தில் தன் தந்தையாரை ஒத்தவன், வில் வீரர்களில் சிறந்தவன் க்ஷேமமாய் உள்ளானா? பார்வதியின் திருக்குமாரனாகிய சுப்பிரமணியக் கடவுளின் அவதாரமன்றோ! அந்தச் சாம்பன்! ஜாம்பவதி தவம் செய்து பெற்ற அப்பிள்ளை, சாம்பன் நலமாக உள்ளானா? யுயுதானன் (சாத்யகி) நலமாக, சந்தோஷமாக உள்ளானா? அவன் அர்ஜுனனிடம் வில்வித்தையின் ரகசியங்களையெல்லாம் கற்றுக்கொண்டான். அவன் ஆண்டவனுக்குப் பணிவிடை பண்ணி என் பிரபுவின் பிரீதியைப் பெற்றவன். தொண்டினால் உயர்ந்தவன். வெறும் விரதானுஷ்டானம், கிரியா விசேஷங்களினால் ஆண்டவனை அடைய முடியாது. உள்ளன்பு ஒன்றினால்தான் அவனை அடைய முடியும். பாவமற்றவரும், மிக்க அறிவாளியுமான அக்ரூரர் நலமாக உள்ளாரா? அவர் கண்ணனிடத்தில் உள்ள பிரேமையினால் என் பிரபுவின் பாதங்கள்பட்ட தெருக்களில் அங்கப் பிரதக்ஷிணம் பண்ணினார் அல்லவா? கண்ணனின் தாயார் தேவகி நலமாக இருக்கிறாரா? க்ஷத்திரியர்களில் போஜர் என்கிற பரம்பரையினரின் தலைவனாகிய தேவகனின் தவப்புதல்வி அவர். தேவர்களின் தாய் அதிதி போன்றும் வேதமாதா தன்னுள் கடவுள் தத்துவங்களை எல்லாம் அடக்கி வைத்திருப்பது போன்றும் அத்தாய் தேவகி சாக்ஷாத் பகவானையே தன் வயிற்றில் தாங்கி ஈன்றெடுத்த புண்ணியவதியன்றோ. தெய்வீகமானவனான, பகவானின் பேரனான அனிருத்தன் க்ஷேமமாய் உள்ளானா? உங்களைப் போன்ற பக்தர்களின் தன்னை அண்டினவர்களின் ஆசைகளையெல்லாம் நிறைவேற்றி வைப்பவன் அவன். யாரை வேத நாயகன் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவோ வேதங்கள் யாரிடத்திலிருந்து தோன்றி வந்தனவோ அப்புருஷோத்தமரே அனிருத்தன். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நால்வகையின் தொகுப்பாகிய மனதின் அதிதேவதை அனிருத்தன் அன்றோ. ஹிரிடிகா, (ஒரு யாதவ தலைவன்) சத்தியபாமையின் புதல்வர்கள், சாருதேஷ்ணா (பிரத்யும்னனின் சகோதரன்) கதன் (பகவான் கிருஷ்ண சகோதரர்களில் ஒருவன்) ஆகிய நன்மக்களாகிய இவர்கள் எல்லாம் நலமா? அன்புள்ள, அமைதியான உத்தவா, ஆ உத்தவா, என் ஆண்டவனின் பிறப்பால் அந்த ராஜகுடும்பம், குலம், இனம், அந்தத் தேச மக்கள் எல்லாருமே மேன்மை அடைந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ண பிரேமை கொண்டவர்களான துவாரகாவாசிகள் அனைவருமே நலமாக உள்ளார்களா?

தர்ம ராஜா யுதிஷ்டிரன், தர்ம தேவதையே வடிவெடுத்து வந்தவன், நேர்மையாக, தர்மமாக ராஜ்யபரிபாலனம் பண்ணி வருகிறானா? யுதிஷ்டிரனை நினைக்கும் போது என்ன என்ன எண்ணங்கள் எல்லாம் எழுகின்றன. நரநாராயணர்—ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனர் அவனது இரண்டு கரங்களைப் போன்றவர்கள், மயனால் அமைக்கப்பட்ட சபாமண்டபத்தில் அவன் சகல ஐஸ்வர்யங்களுடன் தேவசபையில் தேவேந்திரன் இருந்தது போன்று இருந்ததையும், பெரிய அரசர்களும், சகோதரர்களும் அவனிடத்துப் பேரன்புவைத்து அவனுக்குப் பணி விடை செய்ததையும் பார்த்துத் துரியோதனன் பொறாமையில் எரிந்து வாடினான். ஆனால் யுதிஷ்டிரனோ வனவாசத்திலும் ராஜ்ய சம்பத்திலும் சம்பந்தப்படாத ஸ்திதப்பிரக்ஞன். கோபமே வடிவெடுத்த பழிவாங்கும் கடுமையான உறுதி உடைய பீமன் கௌரவர்களிடத்துத் தன் பழைய விரோதங்களை, தங்களுக்கு இழைக்கப்பட்ட தீமைகளை மறந்து அமைதியாக இருக்கிறானா? பழிவாங்கும் எண்ணத்தை விட்டுச் சாந்தமாய் இருந்து வருகிறானா? பீமன் கோபாவேசத்துடன் தன் கதாயுதத்தைப் பல்வேறு விதங்களில் சுழற்றிக்கொண்டு யுத்தகளத்தில் சஞ்சரித்தானானால் பூமியே அவன் வேகத்தைத் தாங்காது. அவ்வளவு பலவான் அன்றோ அவன்.

என் யாத்திரை அனுபவங்கள்

(சுவாமி துருவானந்தர்)

காலை ஏழுமணிக்கு அமர்ந்தேன். தொடர்ந்து மழை. மத்திய பிரதேசத்தில் முக்கியமான பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த தைப் பத்திரிகை மூலம் தெரிந்துகொண்டேன். எப்படியோ மூன்று நாட்கள் பஸ்ஸை விட்டு வெளியேற முடியாது இந்தூருக்குப் போகும் வழியில் பெரிய வெள்ளத்தில் சிக்காது தப் பித்து வெள்ளம் நீர் வற்றியவுடன் புறப்பட லாம் என்று கடைகளில் கிடைத்ததை வாங் கிக்கொண்டு மூன்ருவது நாளில் ஓங்காரேஸ் வரர் ஜ்யோதிர் லிங்கம் உள்ள கோயில் சென்று தரிசித்து அக்கோயிலிருந்து மறு கரைக்குக் கோதாவரியின் குறுக்கே நீண்ட ஆனல் தூண்களற்ற பெரிய பாலத் தைக் கண்டேன். பிறகு உஜ்ஜெயினி போகத் திட்டமிட்டவுடனே ஹஜ்பூர் என்ற ஊரிலே பஸ் நின்று விட்டது. காரணம் மீண்டும் வெள்ளம் வந்தது. ஆக அவ்வூரைச் சுற்றி வடக்கே எங்கே போனாலும் வெள்ளம் என்ற செய்தியே வந்தவண்ணமிருந்தது. பிறகு சிவகாசி, சாத்தூர் கோவில்பட்டியைச் சேர்ந்த தீப்பெட்டி லாரி டிரைவர்கள் வடநாட்டில் உள்ள கனமழையையும், ஆங் குள்ள வெள்ளங்களால் ஏற்படுகிற காலதாம தம், சிரமத்தையும் பற்றிச் சொன்னர்கள். எவ்வாறு இனி வடக்கே போவது என்று யோசிக்கையில் நானும் அந்தத் தொடர்ந்த மழையின் சிரமத்தாலும் வெள்ளத்தின் பாதிப் பாலும் மீண்டும் ஹைதராபாத் புறப்படத் திட்டமிட்டு இந்தூர் பகுதியில் வெள்ள மில்லாத ஊருக்குப் பஸ்ஸில் புறப்பட்டு ஹைதராபாத் சென்றேன்.

எல்லாம் நன்மைக்கே என்று கருதிப்பழக வேண்டும். நம்முடைய பாவனைக்கேற்ற பிர காரம் உலகம் காணப்படுகிறது என்று பேசு கிருேம். எது நிகழ்ந்தாலும் எல்லாம் நன் மைக்கே என்று எண்ணி முயற்சியை விடாது செயல் முறையாகச் செய்துகொண்டு போகும் பொழுது வரக் கூடிய அனைத்தும் நமக்கு நன் மைக்காகத்தான் என்று உணரக் கூடியவேளை வரும். என் மூன்று மாத வட இந்திய யாத் திரையில் நான் அனுபவித்த பல இன்ப துன் பங்கள் உண்மையில் பெரிய பாடத்தைப் புகட் டின. Knowledge Comes through Experience அனுபவத்தின் மூலம் தான் ஒருவன் அறி வைப் பெறுகிருன். எது நடந்தாலும் நமக்கு நன்மைக்காகத்தான் என்ற உணர்வோடு செயலாற்றுகிறவன் எதைக் குறித்தும் அஞ்சு வதில்லை.

மராட்டிய மாநிலத்தில் உள்ள ஔரங்கா பாத்தில் எல்லாம் பார்த்துவிட்டு மத்திய பிர தேசத்தில் உள்ள இந்தூர் என்ற ஊருக்கு டிக்கட் எடுத்துப்பஸ்ஸில் புறப்பட்டேன். காலை ஆறு மணிக்குப் புறப்பட்டு ஜலகாம் என்ற ஊரில் சிறிது நேரம் பஸ் நின்றது. டீசல் பிடித்த பின் புறப்பட்டதும் திடீரென்று பஸ் நின்றது. காரணம் புரியவில்லை. என்னவென்று விசாரித்தபோது தொடர்ந்து பெய்த மழை யினல் ஆற்றில் நீர் பெருக்கெடுத்துப்பாலத் தின் மீது ஓடிக்கொண்டிருப்பதாலும் இனி மேல் நீர் வடிந்தால்தான் பாலததின் மீது போக முடியும் என்று பஸ் கண்டக்டர் கூறி ஞர். நீர் வடிந்து நாம் எப்போது புறப்படு வது என்ற ஒரே பிரச்சனையே எல்லார் உள் ளத்திலும் இருந்தது. பல விஷயங்களில் படித் தவர்கள், பெரியவர்கள் சிறுபிள்ளைகள் போன்று நடந்துகொள்வதைக் காணலாம். ஔரங்காபாத்தை விட்டு எத்தனையோ மைல் கள் வந்த பிறகும் கூடப்பலர் மீண்டும் ஔரங் காபாத் திரும்பி விடலாமா என்று ஏங்கினர். எங்கெங்கோ அலைந்து திரிந்து பார்த்துவிட்டு இறுதியில் பேசாது ஒரே புகலிடமாயுள்ள சொந்தமான தங்கள் பஸ்ஸிலே வந்து மீண் டும் தங்கள் ஊர்க்கதைகளைப் பேச ஆரம் பித்து விட்டனர். மனிதன் பொருளற்ற தன் வாழ்க்கையை எப்படிக் கழிக்கிருன் என்ற விஷயத்தையே அல்லும் பகலும் பேசி அதில் ஆனந்தம் காண்கின்ருன். என்ன தான் கதறி லுைம், பதறினலும் உடனே ஆற்று நீர் வடிந்து விடப்போவதில்லை. எப்போது பஸ் புறப்படுமோ அப்போது பஸ் புறப்படட்டும். நாம் தெய்வ சிந்தனையில் மனதைத் திருப்பு

வோமே என்ற எண்ணம் யாருக்கும் வருவ தில்லை. இதையெல்லாம் பார்த்து இதிலே மூழ்கி விடக்கூடாது என்று முடிவு செய்து கீதை பாராயணம் செய்தல், தாயுமானவர் பாடல், திருவாசகம், திருக்குறள் மற்றும் நம் சமய சாஸ்திரங்களைப் பாராயணம் செய்ய ஆரம்பித்தவுடன் அவர்களுக்குப் புரியாத தமிழைக் கேட்டு மௌனமாக இருந்து வந்தார்கள். இப்படியாக அரை நாள் கழிந்தது. மதிய உணவு அந்த ஊரில் உள்ள ஒரு சிறிய ஹோட்டலில் தான். வந்த பஸ்கள் சில அந்த ஊரில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டவுடன் அந்த ஊர்க்கடைக்காரர்களுக்குச் சரியான வியாபாரம் என்று நினைத்தோம். எப்போதும் கடையில் வியாபாரம் இல்லாது ஈ ஓட்டிக் கொண்டிருந்த அந்தக் கடைக்காரர்கள் எங்களைப் போன்றவர்கள் இரண்டு நாட்கள் முகாம் போட்டவுடன் வியாபாரத்தைப் பெருக்குவார்கள் என்று எண்ணினோம். ஆனால் அக்கடைக்காரர்களோ வந்த அளவு வருமானம் வந்தால் போதும் ஏன் வீணாக உடம்பை அலட்டிக் கொள்ளவேண்டும் என்று ஜடம் போன்று இருந்தார்கள். வடக்கே போகப் போகச் சோம்பல் அதிகம். ஹோட்டல்களை நிறையக் காணலாம். நாம் வலியக் கேட்டாலும் ஏதோ நமக்கு இனமாக, இலவசமாக, இரக்கப்பட்டுக் கொடுப்பது போன்று அரை மனதோடு பல தடவை கேட்டுக் கொண்ட பிறகு பரிமாற வருகிறார்கள். குறிப்பறிந்து, வருபவர்தேவையறிந்து அவர்களைத் திருப்தியுறச் செய்து அனுப்பி வைப்பதுவே நல்ல ஹோட்டல் நடத்துபவர் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாகும். இரண்டு இரவு தங்கியும் நீர் வடியவில்லை. மூன்றாம் நாள் அவ்வூரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். ஸஹபூர் என்ற அந்த ஊரினுள் நுழைந்தோம். வடநாட்டுக்காரர்கள் சரியாகக் குளிக்கமாட்டார்கள். இப்போது நாங்கள் போன சில வீதிகள் மிகவும் அசுத்தமாகவே இருந்தன. தமிழ் நாட்டிலும் பல கிராமங்களை இப்படித்தான் காண முடிகிறது. தங்கள் இருப்பிடத்தைச் சுத்தமாக வைத்திருப்பதே உள்ளம் உயர்வடைய உதவுகிறது என்பர் பெரியோர். Cleanliness is next to God என்ற கோட்பாடும் உண்டு. ஊர் சுற்றி முடிந்ததும் பஸ் புறப்பட ஆயத்தமாயிருந்தது. ஏறி அமர்ந்தவுடன் மீண்டும் ஏமாற்றம். நாளைதான் புறப்படும் என்ற அதிகார பூர்வமான தகவல் இறுதியாக வந்தது.

முடிவில் மூன்று நாட்கள் முகாமிட்டு மறு நாள் காலை நீர் வடிந்து பஸ் போக வசதியாயிருந்தது. ஆற்றுப் பாலத்துக்கு அருகே லாரிகள் நின்று கொண்டிருந்தன. பெரும்பகுதி லாரிகளில் பஞ்சாபிகள் டிரைவர்களாக இருந்தனர். தமிழ் நாட்டு லாரிகள் சிலவும் நின்று கொண்டிருந்தன. தமிழ் நாட்டு லாரி டிரைவர்களிடம் பேசிப் பார்த்தோம். எந்த நேரத்தில் மழை வரும், நீர்ப்பெருக்கெடுத்து ஓடும் என்று நிச்சயம் சொல்ல முடியாது. ஊரை விட்டுப் புறப்பட்டு விட்டால் ஊர் போய்ச் சேர்வதும் நிச்சயமில்லை. லாரிகளைக் கூட வழி மறித்துக் கொள்ளையடிப்பதும், லாரிகளைக் கடத்திச் செல்வதும் சர்வசாதாரணம். ஏதோ ஆண்டவன் துணையிருந்தால்தான் எந்தத் துன்பமும் இல்லாமல் ஊர்ப்போய்ச் சேர முடியும் என்று தங்கள் அனுபவத்தைக் கூறினார்கள். நம் நாட்டு மக்களுடைய ரத்தத்தில் ஊறியுள்ள அந்தத் தெய்வவிசுவாசம் தான் என்னே! பஸ்புறப்பட்டது. இந்தூருக்குப் போய் ஆங்கிருந்து உஜ்ஜெயினிக்குப் போக வேண்டும் என்பது என் திட்டம். உஜ்ஜெனியிலிருந்து பின் பீஹார், ஒரிஸா போக மேலும் திட்டமிட்டிருந்தேன். ஆனால் நான் ஒன்று நினைக்க நிகழ்வது வேறொன்றாக விருந்தது. இந்தூருக்கு அருகில் உடைப்பெடுத்துப் பஸ், லாரி எதுவும் போக முடியாது என்று ஆங்கிருந்து வந்தவர்கள் கூறவே என்ன செய்வது என்று திகைத்த பொழுது ஓங்காரேஸ்வர் என்ற மாபெரும் ஜ்யோதிர்லிங்கம் உள்ளகோயில் இருப்பதாகக் கூறி சில இளைஞர்கள் அதைத் தரிசிக்கப் புறப்பட்டார்கள். என்னையும் அவர்களோடு சேர்த்துக் கொண்டார்கள். கோதாவரி நதியின் இருபுறமும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கோதாவரி நதி மிக விரைந்து ஓடி வருவதால் அவ்விடத்தில் பாலம் கட்ட முடியாது. நவீனப் பொறியியல் வல்லுனர்கள் தூண்கள் இல்லாமலே ஆர்ச் வடிவத்தில் நீண்ட பாலம் கட்டியுள்ளனர். (தொடரும்)

அறவாழ்வும் ஆன்மீகச் சிந்தனையும்

(ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் 12—4—85 அன்று குன்னூர் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

மனிதன் செய்கின்ற ஆராய்ச்சிகளில் எல்லாம் மேலானது தத்துவ விசாரணையே. பரம்பொருள் நாட்டம், ஆத்ம விசாரம், அருள் தாகம், மெய்ப்பொருள் ஆராய்ச்சி என்றெல்லாம் பலவகைப் பெயர்களில் அது இயம்பப் பெறுகிறது. புலன்களுக்கும், பகுத்தறிவுக்கும், மனதிற்கும் எட்டாத ஒன்றை இவற்றின் துணை கொண்டு நாம் அறிய முயல்கின்றோம். நம் அறிவுக்கு எட்டிய வரையில் அளவில் மிக மிகப் பெரியது அண்டம். அளவில் மிக மிகச் சிறியது அணு. அளவில் மிகச் சிறிய அணுவைக்கொண்டு, அளவில் மிகப் பெரிய அண்டத்தை உருவகப்படுத்தி ஆண்டவன் நமது உடம்பாக அமைத்து வைத்திருக்கிறான். இந்த உடம்புக்குப் பிண்டம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. அகண்டம், அணு, பிண்டம் ஆகிய இந்த மூன்றினுள் அகண்டம் என்பது கால எல்லைக்கு அப்பாற்பட்டது. காலம், தேசம், நிமித்தம், வர்த்தமானம் போன்ற எல்லைகளில் கட்டுண்டு கிடக்கும் நம்மால் அகண்டத்தை முழுவதுமாக ஆராய இயலாது. மற்று அணு என்பதோ அதி சூட்சுமமானதோர் வடிவமாகும். அதன் நுண்ணிய இயல்புகளை ஆராய்ந்து உண்மையைப் புரிநது கொள்ளுதல் என்பது எல்லாருக்கும் இயலாது. இனிப பிண்டம் என்பது நம் கைவசம உள்ள ஒன்று; நாம் நாள்தோறும் காண்பதும், அனுபவிப்பதும், பேணிப் பாதுகாத்துப் பயன்படுததுவதும் ஆகிய இந்த உடலைக்கொண்டே நாம உடையவனை அறிந்து கொள்ள முயலலாம். “உடம்பை முன்னர் இழுக்கென்றிருந்தேன், உடம்பின் உள்ளே உத்தமன் கோயில் கொண்டுள்ளான் என்று, உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே” என்பது திருமூலர் வாக்கு.

ஸ்தூலம், சூட்சுமம், காரணம் என்று மூன்று சரீரங்கள் நமக்கு உண்டு. இதில் கண்ணால் நாம் காணும் எலும்பும், சதையும், தோலும் போர்ததிய உடல் என்னும் கூடு ஸ்தூல வடிவமானது. இந்த உடலை ஆட்டிப் படைக்கும் மனம் என்ற கருவி சூட்சுமமானது. ஏனெனில் ஐம்புலன்களால் அதைத்தெரிந்து கொள்ளமுடியாது. அதனைப் புரிந்து கொள்வதோ, அடக்கி ஆள்வதோ ஞானிகளுக்கே சாத்தியம். உடல், உள்ளம் இரண்டையும் இயக்குவன நமது எண்ணங்கள். எண்ணம் என்பது அதிசூட்சுமமானது. நமது உள்ளம் அதன் பிறப்பிடம். பொருந்தாதனவும், உண்மைக்குப் புறம்பானவையுமான எண்ணங்கள் அஞ்ஞானத்தினால் ஏற்படுகின்றன. நல்லது செய்வது போலக்காட்டி மனத்தை அது மயக்குகிறது. மனதை மயக்கும் அந்த அஞ்ஞானம் காரண சரீரம் என்று அழைக்கப்படுகிறது. மின் ஜனனியிலிருந்து மின்சாரம் பிறக்கிறது. அந்த மின்சக்தியினால் விளக்கில் வெளிச்சம் தோன்றுகிறது. அதுபோன்று எண்ணத்தினால் மனம் தோற்றத்துக்கு வருகிறது.மனம் இயக்குவதால் உடல் செயல்படுகிறது.

பிண்டமாகிய இந்த உடல் உண்மையில் நாம் அல்ல. தற்காலிகமாகச் சில வருஷங்களுக்கு நாம் இதை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது போலவே மனம், அதில் தோன்றும் எண்ணங்கள் ஆகியனவும் நமக்குத் துணையாக ஏற்பட்ட கருவிகள் ஆகும். இந்தக் கருவிகள்தாம் நாம் என்று நாம் தவருக எண்ணிக்கொண்டிருக்கிறோம். உண்மையில் நாம் இந்தக் கருவி கரணங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். எத்தனையோ பிறவிகளில் எத்தனையோ வகையான உடல்களை நாம் எடுத்தாகி விட்டது. உடல் அமைப்பில் அடையக்கூடிய உச்சக்கட்ட முன்னேற்றத்தை நாம் அடைந்தாகி விட்டது. அந்தப் போராட்டத்தில் நாம் பெற்ற வெற்றியின் அடையாளமாகவே இந்த மனித உடலை நாம் தரித்துள்ளோம். இனி இந்த உடம்புதான் நாம் என்று முடிவு செய்து விட்டால் மேலே செல்ல வேண்டிய பாதைக்கு நாமே தடைபோட்டவர்கள் ஆவோம். அது தவறு. பரிணும வளர்ச்சியின் (evolution) நோக்கத்தை நாம் சரிவரப்புரிந்து கொள்ள வேண்டும். நமக்குக் கீழ்ப்படியில் உள்ள விலங்குகள், பறவைகள் போன்ற கோடிக்கணக்கான உயிரினங்கள் நமது நிலையை அடையவே நாளும் முயன்று வருகின்

றன. அது போன்று நாம் நமக்கு மேல் படியில் உள்ள தேவர்கள், சித்தர்கள், அருளாளர்கள் போன்ற சான்றோர்களின் நிலையை அடைவதற்கு முயல வேண்டும். பல பிறவிகளிலும் உழன்று இன்று நாம் உயர் பிறப்பு எடுத்துள்ளோம். அது போன்று இந்தப் பிறவியில் முயன்று நாம் உள்ளத்தாலும்,எண்ணத்தாலும் உயர்கதியை அடையவேண்டும். நமக்கு உயர்கதியைத் தரவல்ல சூட்சுமமான இந்த உள்ளத்தை நம் கைவசப்படுத்துதல் மிகவும் கடினமான செயலாகும். யானை எப்பொழுதும் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் தன்னிச்சையாகத் தனது தும்பிக்கையையும், காதுகளையும் ஆட்டிக் கொண்டே இருக்கும். அது போன்று நமது மனமும் ஓயாது அலைந்து கொண்டே இருக்கும். நமது சரீரத்தை அடக்குவதை விட மனதை அடக்குவது மிகவும் கடினமாகும். இவை இரண்டையும் சரியாகக் கையாண்டால் தான் அதிசூட்சமம் பொருந்திய காரண சரீரமாக இருக்கும் அக்ஞானத்தை நம்மால் ஒழிக்க முடியும்.

இந்திரிய இன்பங்களுக்கு வசப்பட்டவர்களால் ஒருநாளும் காரண சரீரத்தை ஆள முடியாது. வெளிச்சத்தைக் கண்டு விட்டில் மயங்குகிறது. மான் ஓசைக்கு மயங்குகிறது. வண்டு பூவின் வாசத்துக்கு மயங்குகிறது. மீன் நாவின் ருசிக்கு அடிமையாகிறது. யானை மேனியின் ஊறு என்ற சுவைக்கு வசப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு புலனுக்கு அடிமையாகித் தமது உயிரையும் இழக்க நேரிடுகிறது. அவ்விதமானால் ஐந்து புலன்களுக்கும் ஒரே நேரத்தில் அடிமையாகிக் கிடக்கும மனிதன் தன்னைச் சுதந்திரம் படைத்தவன் என்று சொல்லிக்கொள்வது எவ்வாறு பொருந்தும்? பொறி புலன்களின் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ளாதவன் அவற்றையும், அவற்றிற்கு அதிபதியான மனத்தையும் அடக்கி ஆள்வது எங்ஙனம்?

ஓர் இளைஞன் துறவு மேற்கொள்ள விரும்பினன். அவன் மனம் பக்குவப்பட்டு விட்டதா, அவன் புலன்கள் அடங்கி விட்டனவா என்று அவனுடைய குருநாதர் கண்டறிய விரும்பினர். ஆகவே ஒரு பிடி சர்க்கரையை எடுத்து அவன் நாவில் வைத்தார். பத்து நிமிடம் கழித்துச் சர்க்கரையைக் கீழே கொட்டச் செய்தார். அவன் வாயில் உமிழ் நீர் ஊருததால் சர்க்கரை ஈரப்பசை இன்றிக் கிடந்தது. புலனடக்கத்தில் வெற்றி பெற்றுள்ளான் என்று உணர்ந்து குருவானவர் அந்த இளைஞனுக்குச் சந்நியாச தீட்சை அளித்தார். இக்காலத்தில் நாம் உணவுக் கூடங்களில் ஒரு காட்சியைப் பார்க்கலாம். பந்தியில் கடைசி இலையில் கறி பரிமாறுவதற்குள் முதல் இலையில் உள்ளதை ஒருவர் சாப்பிட்டு முடித்திருப்பார். தன்னேடு அமர்ந்திருப்பவர்கள் அனைவருக்கும் பரிமாறி முடிக்கும் வரையில் கூட அவரால் தமது புலன்களையோ, கைகளின் அசைவுகளையோ கட்டுப்படுத்த முடிவது இல்லை. இது இப்படி இருக்க மனம் அசையாமல் இருக்கச் செய்வது எங்ஙனம் சாத்தியமாகும்? சலனங்கள் இல்லாமல் பூரணப்பிரக்ஞையில் மனம் லயித்திருக்கச் செய்வது ஒரு பெரிய வித்தை. "சுட்டற்ற பூரணம் என்று எம்மால் அறிதற்கு எளிதாமோ'' என்பது தாயுமானவர் வாக்கு.

இதை உணர்த்த ஒரு கதை உண்டு. ஓர் ஆலயத்தில் பணியாளன் ஒருவன் இருந்தான். நந்தவனத்திற்கு நீர்பாய்ச்சுதல், கோயிலைத் துப்புரவு செய்தல், பூப்பறித்து மாலைதொடுத்தல் போன்ற பணிகளில் அவன் ஈடுபட்டான். கோவிலிலிருந்து தினமும் ஓர் சோற்றுக்கட்டி உருண்டை அவனுக்குக்கிடைத்தது. அதே ஆலயத்தில் துறவி ஒருவர் இருந்தார். அவர் நாள்தோறும் தியான மண்டபத்தில் அமர்ந்து சதா நிஷ்டையில் ஈடுபட்டார். அவருக்குக் கோவிலிலிருந்து இரண்டுபட்டை உணவு கொடுத்தார்கள். சரீரத்தைக்கொண்டு கடுமையாக உழைக்கும் தனக்கு ஒரு பட்டையும், ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருப்பவருக்கு இரண்டு பட்டையும்கொடுப்பதா என்று அவன் கோபித்தான். இது நியாயமா என்று அவன் கேட்டபோது கோயிலார்கள் விதிமுறைகளை மாற்றுவதற்கில்லை என்று சொல்லி விட்டார்கள். வேண்டுமானல் அவர்கள் இருவரும் தங்கள் பணிகளை மாற்றிக்கொள்ளலாம் என்று கூறினர்கள். துறவி இதுவும் இறைவன் பணி தான் என்று அமைதியாகத் தோட்டப் பணியில் ஈடுபட்டார். அன்று

இரண்டு பட்டை கிடைக்கும் என்ற சந்தோஷத்துடன் பணியாளன் தியான மண்டபத்தில் போய் உட்கார்ந்தான். ஒரு சில நிமிடங்களுக்கு மேல் அவனால் அமைதியாக உட்கார முடியவில்லை. கைகால்கள் மரத்துப் போகுமோ என்று அவற்றை மாற்றி மாற்றிப் போட்டும் அவனுக்கு ஒன்றும் முடியவில்லை. கண்கள் ஓயாமல் அங்கும் இங்கும் பார்வையை ஓட்டின. உடல் வளைந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் எழுந்து ஓடிப் போய்க் கோயில் அதிகாரிகளிடம் மன்னிப்புக் கேட்டான். தனக்கு மனம் அடங்காததால் உடலையும் அடக்க முடியவில்லை என்று அவன் தெரிவித்தான்.

ஒரு வங்கி மிகவும் ஆடம்பரமான கட்டடத்தில் இருப்பதால் அதற்குப் பெருமையில்லை. அதிக அளவு பணம் வரவு செலவு செய்யச் செய்ய அதற்குப் பெருமை அதிகரிக்கிறது. அது போன்று அற்புதமான கட்டடங்களால் மட்டும் ஆலயங்கள் பெருமை பெற்றுவிட முடியாது. ஆலயங்களின் சந்நிதிகளில் அருள்சக்தி துலங்கவேண்டும். செல்வந்தர்கள் பெரும் செல்வத்தை வங்கியின் இருப்பில் வைப்பது போலச் சிறந்த அருளாளர்கள் ஆலயத்தின் கண் சென்று வழிபாடுகள் நிகழ்த்தி அருள் சக்தியை அங்கு நிலைநாட்டியிருக்க வேண்டும். பாடல் பெற்ற ஸ்தலம் என்பதன் பொருள் இதுவே. "மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று தாயுமானவரும் இதனை எடுத்துரைக்கின்றார். இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய ஆலயங்களில் சென்று வழிபாடு செய்தால் சிறிதளவு நேரமாவது மனம் எளிதில் ஒடுங்கும். மனதை வசப்படுத்துதற்கு உரிய வழிமுறைகளில் இதுவும் ஒன்றாகும். பொருளைச் சேர்ப்பதற்காக ஆயுளெல்லாம் அலைபவர்கள் அருளை வளர்ப்பதற்காக இத்தகைய நெறிகளைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மனதை அடக்குவதற்காக நாம் இத்தகைய பிரயத்தனங்களைச் செய்கிறோம். அந்த மனம் என்பது எத்தகையது? அது அறிவற்ற ஜடமுமன்று; அறிவு பொங்கும் சேதனமும் அன்று. அது எதனோடு சேர்கிறதோ அதன் இயல்பை ஏற்றுக்கொள்கிறது. சித்பொருளைச் சிந்தித்தால் அது சேதனத்தோடு சேர்ந்து சின்மயமாய் ஆகிறது. ஜடப்பொருளையே எண்ணிக் கொண்டிருந்தால் அறிவு மயங்கி மதம், மாச்சர்யம் போன்ற மலங்கள் நிறைந்து மனம் தன் தூய்மையை இழந்து விடுகிறது. மனம் பழக்க வழக்கங்களுக்கு எளிதில் அடிமையாகிறது. இயல்பை மீறிப்போக அதற்கு இயலாது. ஜன்ம ஜன்மங்களாக அதன்மீது படிந்துவிட்ட வாசனைகளை அது அனுபவித்தே தீரவேண்டும். இதனையே நாம் ஊழ்வினை என்ற சொல்லால் குறிப்பிடுகிறோம்.

விதியின்பிடியிலிருந்து நிரந்தரமாக மனதை விடுவிப்பது என்பது மிகவும் சிரமமான செயலாகும். எனினும் உரிய பயிற்சிகளின் மூலம் இதனை நாம் சாதித்தல் கூடும். மனம் அசைந்தால் வருவது எண்ணம். விதையிலிருந்து செடி முளைப்பது போன்று சலனமுற்ற மனதிலிருந்து எண்ணங்கள் வடிவெடுக்கின்றன. இது மனதின் இயல்பு. புத்தி என்ற மற்றொரு கருவியைக்கொண்டு இந்த மனதின் மாசுபடிந்த எண்ணங்களை நாம் துடைத்துத் தள்ளவேண்டும். பாலுக்கு வெண்மை நிறம் இயல்பாக இருப்பதுபோன்று புத்தி என்ற கருவிக்கு விவேகம் இயல்பாக உள்ளது. அதன் துணையினால் நாம் மனதைத் தேகாத்ம சிந்தையிலிருந்து திசைதிருப்பி அறிவு அல்லது சேதனத்தின் கண் செலுத்த வேண்டும்.

இவ்வாறு செய்வதற்கு முதலில் தோல்வியில் துவளாத உறுதியான மனப்பான்மையும், குறிக்கோளில் தளராத ஈடுபாடும் கொண்டிருத்தல் அவசியமாகும். உடல் எடுத்த நிலையில் இனி அடுத்த பிறவி வேண்டாம் என்று உணர்ந்து இப்பிறப்பிலேயே துவிஜன் அல்லது இரு பிறப்பாளன் ஆதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் கைக்கொள்ளவேண்டும். இதுவே விவேகமும், புத்தியும் படைத்திருப்பதற்கு அறிகுறியாகும். சக்தி வாய்ந்த நல்ல எண்ணங்கள் மனதில் தோன்றத் தோன்ற அந்த மனிதன் மிகவும் நல்லவன் ஆகிவிடுகின்றான். நாளடைவில் சிறந்த விவேகியாக அவன் உருவெடுக்கின்றான். புத்தியை அற்புதமான முறையில் கையாளத்தெரிந்தவன்

புத்தன் எனப்படுவான். அவன் ஐம்புலன் களையும், மனதையும் முழுவதுமாக வென்ற வன் ஆவான். அத்தகைய உத்தமர்களின் உள்ளத்தில் தோன்றும் உயர்ந்த எண்ணங் கள் இந்த வையகத்தையே ஆட்டிப்படைக்கும் அளவுக்கு வல்லமை படைத்தவை.

தூயவன் ஒருவன் மனதில் உதயமாகும் எண்ணம் இறைவன் சந்நிதியில் அர்ச்சனை செய்து சாத்திய மலரைப்போன்று மிகவும் புனிதம் வாய்ந்தது. சூரியனின் கதிரில் உள்ள ஒளி, உஷ்ணம், பிராண சக்தி, புவனம் எங்கும் பரவும் ஆற்றல், வானத்திலிருந்து கீழ் நோக் கிப் பாய்கின்ற வேகம் ஆகிய இயல்புகள் அனைத்தும் அத்தகைய எண்ணங்களுக்கும் இயற்கையாகவே அமைந்திருக்கும்.

நம் பாரத தேசத்தில் பல்லாயிரம் வருடங் களுக்கு முன்னர் வசித்த தவசிகளும், ரிஷிபுங் கவர்களும் அத்தகைய சக்தி வாய்ந்த எண் ணங்களைப் படைப்பிக்கும் வல்லமையைப் பெற்றிருந்தார்கள். அவர்களுடைய தூய் மையே வடிவெடுத்த சிந்தையில் ஒலித்த தெய் வீக வாக்குகள் மந்திர வடிவம்பெற்றன. அவர் கள் அறிந்து கூறிய அத்தகைய மந்திரங்களை முறைப்படி ஜபித்தால் மனம் தெளிவுறும்; சிந்தை திருந்தும். எண்ணம் சிறக்கும். வாழ்வு தூயது ஆகும். பிறவி எடுத்த பயனும் விரை வில் சித்திக்கும். எனவே மகாமந்திரங்களை நாம் சரிவரக் கற்கவும், கேட்கவும், ஜபிக்கவும் கடமைப்பட்டிருக்கின்றோம். "யக்ஞானம் ஜப யக்ஞோ அஸ்மி" என்பது கீதாசாரியன் திரு வாக்கு. எனவே இடைவிடாது மந்திரங்களை வாய் விட்டுச் சொல்லியும், தியானித்துப் பழ கியும் நமது மனதைப் பண்படுத்தவேண்டும்.

மனிதப் பிறவியை உய்விக்கச் செய்யும் மகா மந்திரங்களுக்கெல்லாம் மணிமகுடம் போல் விளங்குவது சூரிய காயத்ரீ. உலோ கத்தில் செலுத்திய மின் சக்தி, மின் விசிறி, மின் அடுப்பு, மின் விளக்கு என்று பல விதங் களில் பயன்படுவது போல அன்றாடம் ஜபிக் கப்படும் காயத்ரீயானது மங்கிக் கிடக்கும் நமது அறிவைத் தூண்டி விட்டு நம்முள் அறி வுச்சுடர் ஏற்றி, உடலைத் தேஜோமயம் ஆக்கி, நமக்கு ஆன்ம சக்தியைப் பெருகச் செய்யும். இவற்றைப் பெற்றவன் ஞானவான் ஆகிறான். இது நமது தேசீயச் செல்வம். இதை விஸ்வ மந்திரமாக மாற்றுவது நமது கடமை.

மேற்கு நாடுகள் விஞ்ஞான ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பனவற்றை உலகுக்கே உரியனவாக்குகின்றன. அதே முறையில் நமது ஆன்மீகச் செல்வத்தை அருள்தாகம் எடுத்த வர்கள் அனைவருக்கும் கொடுக்க நாம் கடமைப் பட்டுள்ளோம். நம் நாட்டில் சூத்திரர்களும், பெண்களும் இம்மந்திரங்களை ஓதலாகாது என்று இடைக்காலத்தில் தடைவிதித்தார் கள். அத்தகைய கருத்து வந்த நாள்தொட்டு நம்நாடு பல விதங்களிலும் க்ஷீண தசை அடைந் தது. அறிவின் தீட்சண்யம் அனைவரும் பெற வேண்டும் என்ற விருப்பம் கொள்வதும், அதற்காக உழைப்பதும் தெய்வத்தின் அருள் பெற்றவர்களுக்கே உரிய தகுதிகள் ஆகும்.

பிறக்கும் பொழுது நாம் அனைவரும் சூத்தி ரர்களாகவே பிறக்கிறோம். தமோகுணத்தை வென்று சத்துவத்தை வளர்க்குமளவு நாம் உயர்பிறப்பாளர் ஆகின்றோம். உடம்பு தோன்றியது முதல் பிறப்பு. உள்ளத்தில் ஒளி பிறப்பது இரண்டாவது பிறப்பு. காயத்ரீ ஓதி உள்ளத்தில் தெளிவு பெற்றவர்கள் அனை வரும் எந்த மதத்தில் அல்லது ஜாதியில் பிறந் தவர்கள் ஆனாலும் அவர்கள் பிராம்மணர்களா கவே இருக்கிறார்கள். அந்த நிலைக்கு நம்மை நாம் உயர்த்திக்கொள்ள முயல்வதே நமது வாழ்க்கை லட்சியமாக இருக்கவேண்டும். இக் காலத்திலோ உத்தியோகம் முதலிய லௌகீக காரியங்களுக்காக உயர் பிறப்பாளரும் தாங் கள் தாழ்ந்த ஜாதியினராக இருக்கக்கூடாதா என்று எண்ணுகின்றார்கள். எனவே வெறும் எண்ணம் அல்லது விருப்பம் என்ற அளவில்கூட நம்மால் உயர்வானதை அடைய முடியவில்லை. பிரம்ம நாட்டம் உடையவனே உண்மையான பிராம்மணன் ஆவான். இது பிறப்பினால் வரு வது அன்று. தன் முயற்சியினால் தான் பெறு கின்ற தகுதியின் அடிப்படையில் ஒருவன் இந்த உயர்நிலையை அடைகின்றான். இந்த ஆன்மீகச் சொத்து வெளிச்சம், காற்று, நீர் போல அனைவருக்கும் உரியது ஆதல் வேண்டும். உடல் வளர்ச்சிக்கு உணவும், சுவாசித்தலும் எந்த அளவுக்கு அவசியமோ அதே அளவுக்கு மனோ வளர்ச்சிக்கு மகாமந்திரங்களும் அவ

சியமாகும். இன்னார்தான் பசிக்கு உணவு கொள்ளலாம் என்று எவ்வாறு கட்டுப்படுத்த இயலாதோ அவ்விதமே இன்னார்மட்டுமே அறிவு வளர்ச்சி, மனோ வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி ஆகியவற்றுக்கு அருகதை உடைய வர்கள் என்று ஒதுக்கீடு செய்ய இயலாது. உயிருக்குப் பிராணன்போன்று உள்ளத்திற்குக் காயத்ரீ மிகவும் அத்தியாவசியமானதாகும்.

அறத்தை அறிபவன் பிராம்மணன். அறம் என்பது யாது? "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற'' என்ற வள்ளுவர் வாக்குப்படி காமம், காழ்ப்பு போன்ற தீய உணர்ச்சிகளைக் களைந்து நாம் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பது அறமாகும். தெய்வம் எழுந் தருளுவதற்கு ஏற்றவாறு அது சாந்நித் தியம் பெற்றுத் திகழவேண்டும். மகாமந்திர மாகிய காயத்ரீ அந்த மாசற்ற மனநிலையை நமக்கு ஏற்படுத்திக்கொடுக்கும். மனம் மாசற்ற நிலையில் உள்ளது என்று எவ்வாறு அறிய லாம்? ஸ்ரீ ராமன் சென்ற வழியில் நம் மனமும் சென்றால் அது நல்ல நிலையில் இருக்கிறது என்று புரிந்து கொள்ளலாம். புருஷர்களுக் குள் அவன் உத்தமன். அறம் வளர்த்த நம்பி என்று ஆன்றோர்கள் அவனைக் கொண்டாடு வார்கள். இன்னார் இன்ன குலம் என்று பாரா மல் வேடன், குரங்கு, அரக்கன் முதலான வர்களைக் கூடத் தனக்கு உற்ற சகோதரர் களாக அவன் ஏற்றுக்கொண்டான். தூய் மையே வடிவெடுத்த அவன் திருமுன்னர் வந்து சேர்ந்தவர்கள் அனைவரும் புனிதர்கள் ஆனார்கள். வீரம், விவேகம், வினயம் என்று எதிலும் அவன் பிறர்அனைவருக்கும் மிக்கானாக விளங்கினான். அவன் திருநாட்டில் அந்தணர் கள் சிறப்புற்று வாழ்ந்தார்கள். எனவே அற மும் மிகவும் சீரிய நிலை பெற்றுத் துலங்கியது. பிறருக்கு உதவி புரிதல் என்னும் நல்லியல்பு ஸ்ரீ ராமனுக்கு ஸ்வதர்மமாகவே விளங்கியது. அந்தணர் முதல் அனைவரும் அவன் ஆட்சியில் இந்த நற்குணத்தைப் பெற்றிருந்தார்கள்.

தர்மம் என்றால் என்ன? தான் இருக்கும் நிலையிலிருந்து தன்னை மேல் நிலைக்கு உயர்த்து வது எதுவோ அதுவே ஒருவருக்குத் தர்மமாக இருக்கவேண்டும். மண்ணாங்கட்டி போன்று ஓர் இளைஞன் செயலற்றுக் கிடந்தான். அவனைப் பார்த்த விவேகானந்தர் "இப்படிச் சோம்பித் திரிவதைவிட நீ திருடிப் பிழைத்தாலும் பாதக மில்லை'' என்று கூறினார். அப்பொழுதாவது அவன் உள்ளமும், உடலும் செயலில் ஈடுபட் டுப் புதிய அனுபவங்கள் அவனுக்கு ஏற்படும்; புதிய உணர்வுகள் தோன்றும்; அதன் விளை வாக அவனிடம் நல்லியல்புகள் தோன்றி அவ னுடைய தீவினைகளைத் துடைத்துத்தள்ளும். அவன் அழுந்திக்கிடக்கும் சோம்பலிலிருந்து மீளுவான் என்று கருதியே அவன் மீது பரிதா பம்கொண்டு விவேகானந்தர் இவ்வாறு அறி வுறுத்தினார்.

ஒவ்வோர் உயிருக்கும் ஒவ்வோர் இயல்பு ஸ்வதர்மமாக இருக்கிறது. நம்மைப்போல் பிறரும் முன்னுக்கு வரவேண்டுமென்று விரும்பு வதும், அதற்கு நம்மால் ஆனதைச் செய்ய முன் வருதலும் மனிதனாகப் பிறந்தவனுக்கு இருக்க வேண்டிய ஸ்வதர்மமாகும். ஓடிஆடி விளை யாடுதல் என்பது குழந்தைகளின் ஸ்வதர்மம். தனது அறிவு, ஆற்றல், அன்பு ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுதல் மாணவனுக்கு ஸ்வ தர்மம். தியானத்தில் ஆழ்ந்திருத்தல் என் பது விவேகானந்தருக்கு ஸ்வதர்மமாக இருந் தது. ஓர் அந்தர்யோகத்தில் ஒருவர் "தியா னம் செய்ய முயன்றால் தூக்கம் வரு கிறதே" என்றார். தியானத்திற்குப் பதில் நாமஜபம் செய்யலாம் என்று அறிவுறுத்தப் பட்டது. "அப்படியும் தூக்கம் வருகிறது" என்றார். "அப்படியானால் நின்றுகொண்டே ஜபம் செய்யலாம்; அதுவும் இயலாதபோது நடை பழகிக்கொண்டே கடவுள் நாமத்தை உரக்கச் சொல்லலாம்" என்று கூறப்பட்டது. "இதுவும் கஷ்டம் தான்" என்றார் அம்மனிதர். "அப்படியானால் தூங்குவதைத் தவிர வேறு வழியில்லை. சிறிதுநேரம் தூங்கிவிட்டுப் பிறகு நன்கு தெளிவாக இருக்கும்போது ஜபம் பண்ணுங்கள்" என்று அறிவுறுத்தப்பட்டது.

எனவே ஒருவருக்கு இயல்பாக இல்லாத ஒன்றை அவர் மீது நாம் வலிந்து செலுத்த முடியாது. ஆனால் அவரே அதன்மீது நாட்டம் கொண்டு சிரத்தையுடன் முயல்வாரானால் அது அவருக்கு தர்மமாகி விடுகின்றது. இந்த அடிப்படையில்தான் கொலையும், கொள்ளையும்

செய்து பிழைப்பு நடத்தி வந்த ஒருவர் காவியங்களில் எல்லாம் தலை சிறந்ததாகிய வால்மீகி இராமாயணத்தை உலகுக்கு அளித்தார். தாழ்ந்த குலத்துப் பெண்களுக்குப் பிறந்த பராசரர், விதுரர் போன்றோரும் மகா ஞானிகளாக விளங்கினார்கள். உலக க்ஷேமத்திற்காக விசுவாமித்திரர் யாகம் பண்ணினார். தாடகை என்ற அரக்கி அதற்குத் தடைபோட முயன்றாள். வேள்வியைக் காத்த ராமன் 'அவள் பெண்ணாயிற்றே' என்று தயங்கினான். "தீமையை ஒழித்துத் தர்மத்தை நிலைநாட்டுதல் உனது தர்மம். தீமையே வடிவெடுத்த இவளை ஒழித்துத் தள்ளுவாய்" என்று விசுவாமித்திரர் இயம்பினார். நெல்லை அழிக்கும் பூச்சியை மருந்திட்டுக்கொல்லுவதுபோலஸ்ரீராமன் அந்த அரக்கியைக் கொன்றொழித்துத் தன் தர்மத்தை நிலைநாட்டினான்.

உலக நன்மைக்காக விசுவாமித்திரர் வேள்வி இயற்றினார். உலக நன்மைக்காக ஸ்ரீ ராமன் அவருக்கு உதவி செய்தான். இருவரும் அவரவர்க்கு உரிய முறையில் தர்மம் காத்தனர். ஒருவர் காட்டியது அறக்கருணை. மற்றவர் செய்தது மறக்கருணை. இங்ஙனம் ஒவ்வொருவரும் செய்கின்ற செயல்களிலும் அதில் காட்டுகின்ற திறமைகளிலும் பாகுபாடுகள் நிச்சயம் வரலாம். இது உலக இயற்கை. அவரவர் தகுதிகளுக்கும், வாழ்க்கை நடைமுறைகளுக்கும் ஏற்றவாறு நான்கு வருணத்தவர்களாக நம் முன்னோர்கள் வாழ்ந்து காட்டினார்கள். பண்பின் அடிப்படையில் பண்டைய வருணதர்மம் ஏற்பட்டது. பின்னர் சமுதாயத்தில் அது ஜாதிக் கொடுமையாக வடிவெடுக்க ஆரம்பித்து விட்டது. நமது உடலில் உறுப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கடமை உண்டு. இவை அனைத்தும் சேர்ந்து உழைப்பதால் உடலில் உயிர் தங்குகின்றது. அதே பாங்கில் மனபரிபாகத்துக்கேற்ப அவரவர்க்குரிய ஸ்வதர்மத்தை முறையாகச் செய்தால் சமுதாய வாழ்க்கை சிறப்பாக அமையும்.

(தொடரும்)

குறிப்புகள்

மத்திநப்பள்ளியில் ஆண்டு விழா

வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர்–குடியாத்தம் பாதையில் உள்ளது மத்தினப்பள்ளி கிராமம். வயல் திருத்தி வாழ்வு பெருக்கும் உழைப்பாளிகள் அவ்வூர் மக்கள். அவர்கள் புற வாழ்வில் எளிமையும், அக வாழ்வில் தூய்மையும் உடையவர்கள். தெய்வப் பற்றும், அறவாழ்வில் ஆர்வமும் உடைய மக்களே பெரும்பான்மையினராக வசிக்கும் இத்தகைய கிராமங்கள் இந்தியாவில் ஆயிரக்கணக்கில் இருந்து வருகின்றன. நம் நாட்டில் ஐதிகமும், ஆன்மீகமும் நாளும் தழைத்தோங்குவது இத்தகைய பண்பாளர்களின் பொருட்டேயாம். கடந்த மே மாதம் 12, 13 ஆகிய தேதிகளில் அவ்வூர் இந்து சமய மன்றத்தில் பத்தாம் ஆண்டு விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நிகழ்ச்சிகள் அவ்வூர் செல்வ விநாயகர் ஆலயத்தில் சுவாமி விவேகானந்தர் அரங்கில் நடைபெற்றன.

அவ்வமயம் நிகழ்த்திய உரையில் கூறப்பட்ட குறிப்புகளாவன : "சிவம் அறிவு மயமாகவும், சக்தி அன்பு வடிவமாகவும் நம்மிடையே இலங்குகின்றார்கள். வைரமும், அதன் ஒளியும் போல ஞானமும், பக்தியும் நம்மில் ஒளிர வேண்டும். ஜடசக்தியை விஞ்ஞானத்தின் வழியே மேனாட்டார் உபாசனை பண்ணுகிறார்கள். நாம் மெய் ஞானத்தில் முன்னேறி ஆத்மசக்தியை வளர்த்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். பகிர்முக சதுர்லபா என்றும், அந்தர் முக சம ஆராத்யா என்றும் லலிதாம்பிகை போற்றப்படுகிறாள். உள்ளே உறங்கும் சித் சக்தியைத் தோற்றத்துக்குக் கொண்டு வருவதே நமது வாழ்க்கை லட்சியமாகும். புலனடக்கமும் மன ஒடுக்கமும் பழகப் பழக ஒழுக்கத்திலும், தியானப் பயிற்சியிலும் நாம் முன்னேறுகின்றோம். பேராற்றல் மிக்க பேரின்பப் பொருளில் மனதை லயிக்கச் செய்து நாம் பெறக்கூடிய ஆன்ம சக்தியானது மனித குலத்தின் நன்மைக்காகப் பயன்படுதல் வேண்டும். சடங்குகளைக் குறைத்துச்சமய ஞானத்தை நாம் பெருக்குவோமாக."

செல்வ விநாயகர் கோயில் தூய்மையாகக்

காட்சியளித்தது. அங்கு அவ்வூர்ப் பெண்கள் கலசங்கள் வைத்து 108 போற்றிகள் சொல்லி விசேஷ பூஜைகள் செய்தார்கள். இறைவனுக்குச் சந்தனக்காப்பு இட்டு நன்கு அலங்கரித்து வைத்திருந்தார்கள். தரையில் எங்கும் வண்ணக்கோலங்கள் அழகு செய்தன. கோயிலில் கூடியிருந்த அனைவரும் பொறுமையாகவும், பொறுப்புடனும் வழிபாடு செய்தார்கள். பின்னர் நன்கு அலங்கரித்த சப்பரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சாரதாதேவியார், விவேகானந்தர் ஆகியோர் திருவுருவப்படங்களை வைத்து ஊரின் ஒவ்வொரு வீதிக்கும் எழுந்தருளச் செய்வித்தார்கள். ஒவ்வொரு வீட்டிலும் விளக்கிற்கு எண்ணெய் கொடுத்துத் தூபதீபம் காட்டியும், தேங்காய் உடைத்தும் சம்பிரதாயமான வழிபாட்டினைச் செய்தார்கள். அவ்வமயம் பெரிய தாமல் செருவு குழுவினரும், உள்ளூர் இளைஞர்களும் அதி அற்புதமான முறையில் பண்டரி பஜனை செய்தார்கள். கால்களில் சலங்கை கட்டி கைகளில் சிறிய கொடி பிடித்து வட்டமாகச் சுற்றி நின்று இறைவனின் திருநாமங்களைப் பாடி அவர்கள் செய்த பஜனை வழி வழி வந்த நம் பக்திப் பண்பாட்டினுக்கு ஒரு சிறப்பு மிக்க சான்றாகத் துலங்கியது. இரவு 2-30 மணிவரை இவ்விதம் அவர்கள் பக்திரஸம் ததும்பிய ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டு அனைவரையும் களிப்புறச் செய்தார்கள். இத்தகைய பண்பாடு பொருந்திய வழிபாட்டு முறைகளை மற்ற ஊர் மக்களும் பின்பற்றித் தங்கள் வாழ்வை வளமுறச் செய்து கொள்வார்களாக.

ஹிந்து பண்பாட்டுப் பயிற்சி முகாம்

தபோவனம் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் திருவேடகம் விவேகானந்தர் கல்லூரியில் வருடந்தோறும் கோடை விடுமுறையில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப் பெறுகின்றன. அவ்வமயம் ஹிந்து சமயத் தத்துவம், பாரத கலாச்சாரத்தின் மேன்மை, இந்தியப் பண்பாட்டினை விளக்கும் அருள் நூல்கள் ஆகியன குறித்து ஆக்க பூர்வமான விரிவுரைகளும், கலந்துரையாடல்களும் நிகழும். இவற்றைப் பற்றிய முறையான விவரங்களை ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிந்து வைத்திருத்தல் அத்தியாவசியமாகும். "எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்பார் ஔவையார். உழுகின்ற உழவனின் முயற்சிக்கும், திறமைக்கும் ஏற்பப் பயிரின் தரம் அமைந்திருக்கும். இக்காலத்தில் தெய்வ பக்தி, தேச பக்தி, சுயநலமற்ற சமூகசேவை, ஒழுக்கம், ஒற்றுமை போன்ற நல்லியல்புகளில் பற்றும், பிடிப்பும் இளைஞர்களிடையே அருகி வருவதாகக் கூப்பாடு எழுகின்றது. வள்ளுவர் பெருமானின் "நோய்நாடிநோய் முதல் நாடிஅது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்னும் கருத்திற்கிணங்கஅடிப்படைக் காரணத்தையும் அதனைப் போக்கும் வழி முறைகளையும் நாம் ஆராயக் கடமைப்பட்டுள்ளோம். இளைஞர்கள் பண்பாட்டில் பற்றும், பிடிப்பும் பெறுதற்கு உற்றதோர் உபாயம் உண்டு. பெற்றோரும், ஆசிரியரும் முதலில் அதில் ஆர்வம் கொள்ள வேண்டும். அதனால் பெரும் நன்மைகள் ஏற்படும் என்பதில் நம்பிக்கை வைக்கவேண்டும். ஹிந்து மதத்தில் குறைவின்றிக் காணப்பெறும் அருளாளர்களைப்பற்றியும், அவர்களின் அருட் செயல்கள், அருளுரைகள் ஆகியன பற்றியும் அவர்கள் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். ஹிந்து தத்துவம் குறுகிய நோக்கங்களைக் கொண்டு இயங்கும் ஒரு நிறுவனம் போன்றது அன்று. அது மனிதகுலம் முழுவதுக்கும் சொந்தமானது. மனித மனத்தினை மேன்மைப்படுத்துவதும், மாண்புறச் செய்வதும் அதன் நோக்கமாகும். எனவே இந்து மதப் பண்பாட்டில் பயிற்சிபெற்றவர்கள் எல்லாவகையிலும் சிறந்து விளங்குவார்கள் என்பதும், அத்தகையவர்கள மற்றவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்வார்கள் என்பதும் உறுதி. இத்தகைய நோக்கங்களுக்காகவே இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தோற்றுவித்த அருளாளர் மற்றக் கல்வி நிலையங்களின ஆசிரியப் பெருமக்களும் இப்பயன்களைத் துய்க்கவேண்டும் என்பதைக் கருத்தில்கொணடு 1974ஆம் ஆண்டில் இப் பயிற்சிமுகாமைத் துவக்கினார்கள். இங்கு ஐந்து நாட்கள் தங்கிப் பயிற்சிகளில் கலந்துகொள்பவர்கள் பின்னர் தத்தம் ஊர்களுக்குச் சென்று தாம் பெற்ற இனபம் பிறரும் பெறச் செய்வார்கள். ஒளிவீசும் தீபம் மற்ற விளக்குகளையும் ஏற்றுவதற்குத் தடை இல்லை அல்லவா?

வேதகாலத்தில் முனிபுங்கவர்களும், சான்றோர்களும் ஓதிய மகாமந்திரங்கள் பாரதத்தை அமரர் வாழுதற்கு உகந்த புண்ணிய பூமியாகச் செய்திருந்தன. எனவே தினசரி வாழ்க்கையில் அவர்கள் கைக்கொண்டிருந்தபழக்க வழக்கங்களைச் சிறிதளவேனும் நாம் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளோம். சென்ற மே மாதம் 22ஆம் தேதிமுதல் 28ஆம் தேதிவரை நடைபெற்ற முகாமில் தமிழகமெங்கணும் இருந்து 57 ஆசிரிய ஆசிரியைகள் கலந்துகொண்டார்கள். தினசரி வாழ்க்கை காலை 5-30 மணிக்குப் பிரார்த்தனையுடன் துவங்கியது. தெய்வத் திருநாமங்களைச் சொல்லுதல், பக்திப் பாடல்களைப் பண்ணோடு பாடுதல், காயத்ரீ மந்திரம் ஜபித்தல், தியானம் பயிலுதல் யோகாசனப் பயிற்சி ஆகியவை நாள்தோறும் நிகழ்ந்தன.

காலை உணவுக்குப் பின்னர் 'சத்யம் வத, தர்மம் சர' என்ற வாக்கியத்திற்கு இணங்க வாழ்ந்து காட்டிய சத்யகாம ஜாபாலன், நசிகேதன் போன்ற பல மகாபுருஷர்களைப்பற்றி விரிவுரைகள் ஆற்றப்பட்டன. கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் அத்தகைய பெருமக்கள் 45 பேர்களின் வரைபடங்கள் உள்ளன. அவர்களின் அறவாழ்க்கை நெறிமுறைகளைப் பற்றி விளக்கவுரைகள் நிகழ்ந்தன. கூட்டு வாழ்க்கையில் ஒற்றுமை உணர்ச்சி, சேவை மனப்பான்மை ஆகியவற்றை வலியுறுத்தும் வண்ணம் ஆசிரியர்கள் உணவு பரிமாறுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டனர். தபோவனத்தைத் தோற்றுவித்த அருளாளர் இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவங்கள், யோக சாதனங்கள், யமம், நியமம்பற்றிய கோட்பாடு, வர்ண ஆசிரம தர்மம் ஆகியவற்றைக் குறித்து அருளுரை வழங்கினர்கள். ஸ்ரீமத் பகவத் கீதை, இராமாயணம், மகாபாரதம் ஆகிய அறநூல்களைமையமாக வைத்துத்தபோவனத் துறவிகளும், மதுரைப் பல்கலைக்கழகம், திருச்சி பாரதி தாசன் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பேராசிரியர்களும் விரிவுரைகள் ஆற்றினர். இதில் தமிழகக் கல்லூரிக்கல்வித் துணை இயக்குநரும்கலந்துகொண்டு உரையாற்றினர். இதன் பயனைக்கருதிப் பல்கலைக் கழகங்களின் மானியக் குழுவும் இதற்குப் பரிந்துரையும், பொருளுதவியும் நல்கியது. இதன் தொடர்பாக மதுரை சாரதாசமிதியில் இராமாயணக் கருத்தரங்கும், அருள் துணை சிறுவர் சங்கத்தினரின் இராமாயணக் கதாகாலட்சேபமும் நன்கு நிறைவேறின. மேலும் இந்துமத முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் ராஷ்டரீய ஸ்வயம் சேவாசங்கம், பாரதீய சிக்ஷண் மண்டல், விஸ்வ ஹிந்து பரிஷத், ஹிந்து முன்னணி போன்ற அமைப்புகளைக் குறித்தும் ஆசிரியர்கள் நனகு தெரிநது கொண்டார்கள். இரவில் நடைபெற்ற சத்சம்பாஷணையில் ஆசிரிய அன்பர்கள் ஆன்மீக விஷயங்களில் தமக்குற்ற சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெறறுர்கள். பிரம்மதேஜஸும், க்ஷத்திரியவீர்யமும்மிக்கபரசுராமனைப் போல் எதிர்கால இளைஞர்களை உருவாக்க வேண்டும் என்று அனைவரும் உறுதி பூண்டார்கள். இனி வரும் ஆண்டுகளில் பெருமளவில் ஆசிரியப்பெருமக்கள் இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டு நற்பயன் பெறுவார்களாக.

செய்திகள்

நிகழ்பவை:

இவ்வாண்டு திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல ஒன்பதாவது, பத்தாவது வகுப்பு மாணவர்கள் ஜுலை 26, 27 தேதிகளில் சிதம்பரம் நடராஜர் சன்னிதியிலும், கோவிந்தராஜர் சன்னிதியிலும் ஐக்கிய வணக்கம் செய்வார்கள். மற்ற வகுப்பு மாணவர்கள் தமிழ் நாட்டிலுள்ள கோயில்களுக்கு வழிபாட்டுக்குச் சென்று வருவார்கள். இவ்வாண்டு குருகுலத்தில் சேர்ந்தபுதிய மாணவர்கள் திருச்சியிலுள்ள மலைக்கோட்டை, திருவானைக்கோவில், ஸ்ரீரங்கம், சமயபுரம், வயலூர் முதலிய கோவில்களுக்கு வழிபாட்டுக்குச் சென்று வருவார்கள்.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் ஆடி விடுமுறைக்காக ஆகஸ்டு மாதம் 11ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மேல் அவரவர் ஊருக்குப் புறப்படுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தமிழ் வியாக்கியானம் ரூ.	26-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு ,, ...	21-00
மஹாபாரதம் ,, ...	8-00
இராமாயணம் ,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ...	6-50
தினசரி தியானம் ,, ...	5-00
ஞானயோக விளக்கம் ...	15-00
ராஜயோக விளக்கம் ...	12-00
கர்மயோக விளக்கம் ...	10-00
பக்தியோக விளக்கம் ...	9-00
விவேகானந்த விவரணம் ...	7-50
விவேகானந்த உபநிஷதம் ...	7-00
கடவுளின் வடிவங்கள் ...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1 ...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2 ...	5-50
மாணவருக்கு ஒரு சொல் ...	4-50
சகோதரி நிவேதிதை ...	3-75
சுவாமி விவேகானந்தர் ...	3-50
பஜனைப்பாடல்கள் ...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம் ...	3-00
அனுஷ்டான வேதாந்தம் ...	3-00
எதிர்கால இந்தியா ...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ...	3-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம் டி ...	3-00
சின்மயானந்த குரு டி ...	3-00
ஆனந்தமானபரம் டி ...	3-00
சுகவாரி டி ...	3-00
மௌனகுரு வணக்கம் டி ...	3-00
எங்கும் நிறைகின்றபொருள் டி ...	2-50
மலைவளர் காதலி டி ...	1-50
பரசிவ வணக்கம் டி ...	1-00
கண்ணன் என்னும் கடவுள் ...	2-50
அறம் வளர்த்த நம்பி ...	2-50
சந்நியாசி ...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ...	2-50
ஹரிச்சந்திரன் டி ...	2-00
தவப்புதல்வர்கள் டி ...	2-00
வாலி மோட்சம் டி ...	2-00
பாதுகாபட்டாபிஷேகம் டி ...	1-75
நன்மக்களைப் பெறுதல் ...	1-75
விபீஷணன் சரணாகதி (நாடகம்) ...	1-50
பரமஹம்சர் பாமாலை ...	1-50
காயத்ரீ ...	1-50
மாணாக்கன் ...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ...	1-25
சைவன் யார்? ...	1-25

*ஆலய வழிபாடு ...	1-25
*ஆத்ம சக்தி ...	1-25
*மனிதனது நிஜசொரூபம் ...	1-25
*சிவதத்துவம் ...	1-25
இறைவணக்கம் ...	1-00
குழந்தைகளின் களிக்கூடம் ...	1-00
இராவண தத்துவம் ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்) ...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்) ...	1-00
தபோபலன் (நாடகம்) ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும் ...	1-00
நோய்க்கு இடம் கொடேல் ...	1-00
*கணபதி ...	1-00
*சக்தி தத்துவம் ...	0-90
*சூரியநாராயணன் ...	0-75
தெய்வீக மகிமைகள் ...	0-75
*முருகக்கடவுள் ...	0-75
வர்ணாச்ரம தர்மம் ...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ...	0-60
*விஷ்ணு தத்துவம் ...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?	0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்) ...	10-00
விவேகானந்தரின் வீர கர்ஜனை	0-40
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ...	0-30
கந்தர் அநுபூதி ...	0-30
The Bhagavad Gita (12th Imp.) ...	30-00
Sri Lalithambika ahasranama Stotram	15-00
The Indian National Education ...	10-00
Tirukkural (with plastic cover) ...	9-00
Ramakrishna lives Vedanta	8-00
Mahaveer Sri Hanuman ...	7-75
Man Making Message ...	7-00
Siva Sahasranama Stotram ...	7-00
Ramayana (with plastic cover) ...	7-00
Mahabharata ,, ...	6-00
The Bhagavad Gita (Small Size) ...	6-00
Sri Krishna-The Manifest Divinity ,, ...	6-00
Daily Divine Digest (DELUXE) ...	6-00
Daily Divine Digest (Ordinary) ...	4-00
Facets of Brahman or The Hindu Gods ...	5-00
Sri Vishnu Sahasranama Stotram ...	4-00
Thus Speaks Tayumana Swamigal ...	3-50
*Introducing The Gita ...	2-00
Holy Bible—In the Light of Vedanta ...	1-50
Reminiscences of Master Mahashaya ...	1-50
The Nursery School ...	1-50
The Garland of Paraaparam ...	1-50
*Key to Higher Life ...	1-25

* இக்குறியிட்ட தலைப்புகள் பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

சேலம் ஸ்ரீ ஸாரதா கல்லூரியில்

மூன்று நாட்கள் சிறப்பு வழிபாடு

ஆகஸ்ட் மாதம் 10 சனி, 11 ஞாயிறு, 12 திங்கள்

சேலம் ஸ்ரீ ஸாரதா கல்லூரியில் ஆகஸ்ட் மீ 10, 11, 12 தேதிகளில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி முறைப்படி சிறப்பு வழிபாடு நடைபெறும். ஆகஸ்ட் 10ஆம் தேதி சனிக்கிழமை 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரமும், 11ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை 'ஓம் மஹாசக்த்யை நம:' என்னும் மந்திரமும் 12ஆம் தேதி திங்கட்கிழமை 'ஓம் நமசிவாய' என்னும் மந்திரமும் நாம அர்ச்சனையின்பொழுது ஜபத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதில் அன்பர்களும், தாய்மார்களும் மூன்று நாட்களிலுமோ அல்லது வசதிப்படும் நாட்களிலோ கலந்து கொள்ளலாம். தங்குவதற்கு இடவசதி ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே அமைக்கப்பெறும். தமக்குத் தேவையான படுக்கை வசதிகளை அவரவர்களே கொண்டுவரவேண்டும். உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்பது வீதம் நேரில் செலுத்தலாம்.

நிகழ்ச்சி முறை

காலை

5-45	மணி முதல்	6-00 மணி வரை	—	திருப்பள்ளி எழுச்சி
6-00	,,	7-00 ,,	—	நாம அர்ச்சனை
7-00	,,	7-10 ,,	—	தியானம்
7-30	,,		—	சிற்றுண்டி
9-00	,,	10-00 ,,	—	சத் சம்பாஷணை
11-00	,,	12-00 ,,	—	நாம அர்ச்சனை
12-00	,,	12-10 ,,	—	தியானம்
12-30	,,		—	நண்பகல் உணவு

மாலை

4-00	மணி முதல்	4-30 மணி வரை	—	சிற்றுண்டி
4-30	,,	5-00 ,,	—	பஜனை
5-00	,,	6-00 ,,	—	நாம அர்ச்சனை
6-00	,,	6-10 ,,	—	தியானம்
6-30	,,	7-30 ,,	—	சொற்பொழிவுகள்
7-30	,,	8-00 ,,	—	கலை நிகழ்ச்சி
8-30	,,		—	இரவு உணவு

இங்ஙனம்
சித்பவானந்த

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt